# கன்மோகினி

ஆசிரியை :
வை.மு.கோதைநாயகி அம்மா



17 APR 1959
MADRAS

## கஸ்தூரி திலகம்

307

(தொடர்ச்சி)

25. கலக நாடகம்—கபட நாடகம்
26. மங்கையின் நடிப்பு—மனோவேகத் துடிப்பு
27. தனயனின் கலக்க இதயம்—தந்தையின் ஞான உ
28. தீய்ந்த பயிரில் தீயும் பிடித்தது
29. ப்ரேமை நதியில் பிளவுச் சுழல்
30. எரியும் வீட்டில் எண்ணெய் மழை பெய்தது
31. அன்பின் வேகத்தின் அணைகடந்த வெள்ளம்
32. விதியின் கூற்றை வெல்லுதற்கு ஆமோ ?

1808

## பொன்விழா ! ! !

# அன்பர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## தவறினால் மறுபடியும் வாய்க்காது

### கொஞ்சம் பிரதிகளே கைவசமிருக்கின்றன

நமது புதிய சந்தா நேயர்கள் கடந்த ஆண்டு சஞ்சிகைகளில் வெளியான நாவல்களையும் சந்தா விலைக்கே கொடுக்கும்படிக் கேட்கிறார்கள். ஆனால், சஞ்சிகையாக அனுப்பும் தபாற் செலவைவிட தனிப் புத்தகமாக அனுப்புகையில் இரண்டத்தனைக்கு மேலாகச் செலவாகின்றதால், நாம் புத்தகத்தின் விலையை அதிகமாக்க அவசிய மேற்படுகின்றது. அடியிற் கண்ட சில நாவல்கள் மாத்திரம் சஞ்சிகை ரூபமாகக் கொஞ்சம் காபிகள் இருப்பதால், அவற்றைச் சஞ்சிகை விலைக்கே கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். அன்பர்கள், தங்களுக்கு வேண்டிய நாவல்களின் விலையை முன்பணமாக உடனே அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

| | சஞ்சிகை விலை. | தனி நாவல் விலை. | | சஞ்சிகை விலை. | தனி நாவல் விலை. |
|---|---|---|---|---|---|
| வானக்குயில் | ரூ. 0 10 | ரூ. 1 4 | நளினசேகரன் | ரூ. 0 4 | ரூ. 0 8 |
| ஜீவியச் சுழல் | 0 10 | 1 4 | புத்தியே புதையல் | 0 6 | 0 14 |
| மாலதி | 0 4 | 0 8 | ஆனந்த ஸாகர் | 0 4 | 0 8 |
| சந்திரமண்டலம் | 0 8 | 1 0 | தியாகக்கொடி | 1 2 | 2 0 |
| பரிமளகேசவன் | 0 10 | 1 4 | மங்களபாரதி | 1 0 | 2 0 |

## சந்தா நேயர்கள் கவனிக்கவும்

நமது சஞ்சிகையை ஆங்கில மாதம் முதல் தேதி யன்று இந்தியா, ஸிலோன் ஊர்களுக்கும் முதல் வியாழனன்று பர்மாவுக்கும் முதல் வெள்ளியன்று மலேயா முதலிய வெளிநாட்டிற்கும் அனுப்புகிறோம். ஒரே ஊரில் ஒருவருக்குக் கிடைத்து மற்றவர்களுக்குக் கிடைக்கவில்லை யென்றால், அது தபாலில்தான் தவறி இருக்க வேண்டும் என்பதை நேயர்கள் கவனிக்கவேண்டும். 10-ந் தேதிக்குள் சஞ்சிகை கிடைக்காத உள்நாட்டு நேயர்களும் 15-ந் தேதிக்குள் கிடைக்காத வெளிநாட்டு நேயர்களும், உடனே தெரிவித்தால் மறுபடியும் அனுப்புகிறோம்.

---

**வீண் விளம்பரமல்ல......**

# வத்ஸகுமார்

அணா 8· சந்தாநேயர்களுக்கு அணா 6

ஆனால், நீங்கள் தினசரி வாழ்க்கையில் காணும் அனுபவம் முடிவு வரை ஊகிக்க முடியாத ஆச்சரியம், அடக்க இயலாத சிரிப்பு மிகுந்த சிறந்த சமூகக் கதை.

---

## ஒரு ரூபாய்க்கு 3 நாவல்கள்

உளுத்த இதயம்
மகிழ்ச்சி உதயம்
வத்ஸகுமார்

தனி விலை ரூ 1-6-0
முன்பண மனுப்பினால்
தபாற் செலவு இனாம்

# வந்தே மாதரம்



தாயே!
ஒரு ஸ்திரீயின் ஹ்ருதயத்தை
யாராவது அறிவார்களா?
மேலும், அவள் ஒரு தாயாய்
இருப்பின் எத்தகைய தியா
கத்தைச் செய்யக்கூடும்,
செய்வாள் என்று? அப்படிப்
பட்ட தாயார் இனத்தில்
ஒருத்தியாவள்
ஜானகி

வாஹினி

## வந்தே மாதரம்

[தெலுங்கு பேசும் படம்]

ஜானகியாகிய காஞ்சனமாலா தாயாராக, நடிப்பின் சிகரத்தை அடைந்திருக்கிறார். புதியதும் புகழுடையதுமான முறையில் அவர் தோன்றுகிறார்.

அவர், நாகய்யா, கல்யாணி முதலியவர்களுடன் நடிப்பதை, நீங்கள் காண கட்டாயம் விரும்புவீர்கள்.

---

ஏப்ரல் முதல் தேதி முதல்

## பிராட்வே டாக்கீஸில்



# நாகஸ்வரம்

வித்வான்:

## ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி

* இவரை, சங்கீத அபிமானிகள் சென்னையிலும், இதர இடங்களிலும் அறியாமலிருக்கமாட்டார்கள். வட இந்தியாவின் பல பாகங்களிலும் விசேஷங்களுக்கு இவரை வரவழைப்பது குறிப்பிடத்தக்கது. கர்நாடக பாணியில் வெகு திறமையாக வாசிக்கும் இவருடைய கச்சேரியை,

## ஏப்ரல்மீ 7-ந் தேதி வெள்ளிக்கிழமை

**6-45** முதல் **7-15** வரையிலும்
**7-30** முதல் **8-30** வரையிலும்

**அகில இந்திய ரேடியோவில்**
**எல்லோரும் கேட்டுக் களியுங்கள்**

* நெ. 2, நீலி வீராசாமி செட்டித் தெருவு, திருவல்லிக்கேணி.

## நவீன சேகரன்

உயரிய டாக்கீ நாவல் : : இரண்டாம் பதிப்பு

செருக்காலழிந்த சீமாட்டி ஒருத்தியின் வாழ்க்கையையும், அடியார்க்கு அடியவனும், மிடி தீர்க்கும் மித்திரனுமான ஒருவனின் அபூர்வ ஜீவியத்தையும் சித்திரிக்கும் சமூக சீர்திருத்த தேசிய நாவல். கலிகால தெய்வம் கண்மூடியல்ல; 'தன்வினை தன்னைச் சுடும்; இல்லற வாழ்வே நல்லறமாகும்' என்னும் உண்மைகளை நிரூபிக்கும் சிறந்த கதை. புதிய பதிப்பு வெளிவந்து விட்டது.

விலை அணா. 8.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீராகவ கவி.


| மலர் 16 | பகுதான்ய ௵ பங்குனி ௴<br>ஏப்ரல் 1939 | இதழ் 4 |
|---|---|---|


# திருமால் துதி

நின்னைப் பிரிந்து நிலையிலா இவ்வுலகில்
துன்னும் வினையில் சுழல்வேனைப்—பொன்னில்
பொலிகின்ற ஆழிப் பொருபடையோய் என்றன்
வலிதன்று வெந்நோயை வாட்டு. 1

வாட்டும் அசுரரைமுன் வார்சடையோனுக்(கு) ஐயம்
நீட்டும் அடியார்க்கு நீள்கதியைக்—காட்டும்
வளங்துலவு மாவலிபால் மன்னுலகங் கொண்ட
களங்துலவு மெய்யினன் கை. 2

கையில் சிலைதரித்துக் கார்முகிலே வாலியைமுன்
நையக் கணைதொடுத்த நாதனே !—உய்ய
அடியேனைக் கொல்லும் அருவினையை நீக்க
முடியாதோ சொல்க முயன்று. 3

—திரு. ராகவாசாரியர்.

# "வெளியாட்கள் தலையீடா?"

---

## சர். ஸி. பி. க்கு, மஹாத்மாவின் பதில்

சமஸ்தானாதிபதிகள் மாத்திரம் தங்கள் இஷ்டப்படி வெளி உதவியைக் கோரலாம்; ஜனங்கள் வெளி உதவியைத் தேடக் கூடாதோ? சமஸ்தானாதிபதிகள் வெளி உதவியைக் கோருவதற்குத் தங்கு தடையே கிடையாது. ஜனங்களின் கக்ஷி இந்த விஷயத்தில் தானாகவே பல கட்டுப்பாடுகளை விதித்துக்கொண்டிருக்கிறது. சத்தியாக்கிரஹ சாஸ்திரத்தில் ஒரு நிபுணன் என்ற ஹோதாவில், ஆலோசனை கூறுவதைத் தவிர, நான் வேறென்னதான் செய்துவிட்டேன்? இப்படி ஆலோசனை கூறுவதன் மூலம் ஜனங்களிடை அஹிம்சை உணர்ச்சியைப் பரப்புவதற்கும், சமாதானத்திற்கும் உதவி செய்கிறேன். சமஸ்தானப் பிரஜைகளுக்கும், பிரிட்டிஷ் இந்தியா என்று சொல்லப்படும் பிரதேசங்களிலுள்ள ஜனங்களுக்கும் இடையே இருக்கும் பந்தங்கள் பிரிக்க முடியாதவை. தாங்கள் சுதந்தரமானவர்களென்றும், ஒருவர்க்கொருவர் சம்பந்தமில்லையென்றும் சமஸ்தானாதிபதிகள் பெருமை அடைகிறார்கள். அவர்களிடையே அம்மாதிரி பந்தங்கள் ஒன்றும் கிடையாது. ஆதிபத்ய சர்க்காரின் (பிரிட்டிஷ் சர்க்கார்) அனுமதி இல்லாமல் அவர்கள் ஒரு துரும்பைக்கூட அசைக்கமுடியாது. இந்த ஆதிபத்ய சர்க்காருக்குத் தலை வணங்கிப் பணிவதுதான் அவர்களிடையேயுள்ள பொது பந்தம். ஆனால், ஆதிபத்ய சர்க்காரே, இப்போது வர வர தேச மக்களின் இஷ்டப்படிதான் காலத்தைத் தள்ள வேண்டி இருக்கிறது. சமஸ்தானப் பிரஜைகளும் அதில் சேர்ந்தவர்கள் தான்.

சத்தியம், அஹிம்ஸை மூலம் யாரும் ஜெயிக்க முடியாத பலத்தைப் பெற முடியும் என்பதை ஜனங்கள் உணர்ந்தால், ஆதிபத்யசர்க்கார் தானாக மறைந்து, அதற்குப் பதிலாக ஜனங்களின் சக்தியே ஆதிபத்ய அதிகாரமாக ஏற்பட்டுவிடும். ஆகவே, சர். ஸி. பி. ராமஸ்வாமியும், அவரைப் போன்ற அபிப்பிராயமுடைய திவான்களும், தங்கள் அரசர்களுக்குத் தவறான யோசனை கூறுபவர்களாய் இருக்கிறார்களென்றே எனக்குத் தோன்றுகிறது. அவர்கள் சமஸ்தானாதிபதிகளுக்கு நல்லது செய்யவில்லை. காங்கிரஸையும், காங்கிரஸ் ஊழியர்களையும், சமஸ்தானத்தில் அதனுடைய இயற்கையான செல்வாக்கு பரவுவதையும், அலக்ஷியம் செய்து புறக்கணிக்க முயற்சிப்பது ஒரு சிறிய குழந்தை, தன் உள்ளங்கையினால் பிரமாதமான பிரவாகத்தைத் தடுக்க முயற்சிப்பது போலிருக்கிறது. ஜனங்களின் நியாயமான அபிலாஷைகளை நசுக்கச் செய்யும் இந்த முயற்சியினால் இரண்டு காரியங்கள் ஏற்படுகின்றன. ஒருபுறம், மன்னர்களிடம் விசுவாசமுள்ள ஜனங்களுக்கு, அவர்களிடம் துவேஷம் ஏற்படுகிறது. மற்றொருபுறம் தாங்கள் அனுமதிக்கப்பட்டால் சமஸ்தானாதிபதிகளுக்கு உதவி செய்ய விரும்பும் காங்கிரஸுக்கும், சமஸ்தானாதிபதிகளுக்குமிடையே துவேஷம் ஏற்படுகிறது.

183031

காலப்போக்கை உணர்ந்து அதற்குத் தகுந்தாற்போல் நடந்துகொள்ளும்படி சமஸ்தானதிபதிகளையும், அவர்களுக்கு ஆலோசனை கூறுபவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். பயங்கரமான முறைகளைக் கையாளுவதன்மூலம் சுதந்தர இயக்கத்தை கொஞ்சகாலத்திற்கு அடக்கி வைப்பதாய் இருக்கலாம். ஆனல், அதை அடியோடு நசுக்கிவிடுவதென்பது ஒருநாளும் சாத்தியமில்லாத காரியம். ஆதிபத்ய சர்க்காரும், தங்களுடைய அளவுக்கு மீறிய ஜாக்கிரதையை விட்டொழிக்கவேண்டி இருக்குமென்றும் நான் நினைக்கிறேன். ஆதிபத்ய சர்க்கார் சமஸ்தானதிபதிகளுக்குச் செய்ய வேண்டிய கடமை ஒன்றிருந்தால், அதைப்போல் அவர்கள் ஜனங்களுக்குச் செய்யவேண்டிய கடமையும் இருக்கிறது. ஜனங்களை யார் லக்ஷியம் செய்கிறார்களென்ற காலம் மலையேறிப் போய்விட்டது. சமஸ்தானதிபதிகள் வழிக்கு வராவிட்டால், 'உங்களுடைய ஜனங்களை அடக்கும் வேலைக்கு எங்கள் உதவியை எதிர்பார்க்கவேண்டாம்' என்று ஆதிபத்யசர்க்கார் அவர்களிடம் தெளிவான பாஷையில் சொல்லட்டும். பல மாகாணங்களில் காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளாய் இருக்கிறார்கள். பக்கத்திலுள்ள சமஸ்தானங்கள், காங்கிரஸ்மீது அவமதிப்புகளைச் சுமத்திக் கொண்டிருக்கும்போது, ஆதிபத்ய சர்க்கார் பேசாமல் இருக்கமுடியாது. இந்தப் பொருத்தமில்லாத நிலைமையை உடனே நிவர்த்தித்தாகவேண்டும்.

# வெளிநாட்டுச் செய்திகள்

## நாங்கள் அங்கீகரிக்க மாட்டோம்

செகோஸ்லோவேகியாவை, ஜெர்மனி ஸ்வீகரித்துக் கொண்டது நியாயமென அங்கீகரிக்க முடியாதென்று கூறும் ஒரு யாதாஸ்தை அமெரிக்க சர்க்கார் ஜெர்மன் ஸ்தானதிபதியிடம் கொடுத்தனர். பிரேக்கிலுள்ள தங்கள் காரியாலயத்தை அமெரிக்க சர்க்கார் மூடிவிடுவார்கள். அங்குள்ள ஸ்தானதிபதி உடனே வாபஸாகுமாறு உத்தரவு போயிருக்கிறது.

## ருமேனியா-ஜெர்மன் வர்த்தக பேரங்கள்

அநேகமாய் புதன்கிழமையன்று ஜெர்மனி-ருமேனியா வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகுமென்று நம்பப்படுகிறது. இப்போதைய ஒப்பந்தத்தை விரிவாக்கும் புதிய உடன்படிக்கை செய்து கொள்ளப்படும். உற்பத்தியாகும் பெட்ரோலில் ஒரு வீதாசாரத்தை ஜெர்மனிக்கு அனுப்ப ருமேனியா சம்மதிக்கலாம்.

## பால்கன் ஐக்கியம் அவசியம்

அங்கோராவில் பல்கேரியாவின் பிரதம மந்திரி கியாஸிவனுப், துருக்கியின் வெளிநாட்டு மந்திரி ஸாராகோக்ளுடன் சில தினங்களாக சம்பாஷணைகளை நடத்திவருகிறார். இப்போதைய சந்தர்ப்பத்தில் எல்லா பால்கன் தொகுதி நாடுகளும் ஒரு முகமாய் நடந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி அவர்களிருவரும் விடுத்த அறிக்கை ருமேனியாவுக்குத் திருப்தி யளித்திருக்கிறது. இந்த நெருக்கடியில் பலாத்காரத்தை உபயோகித்து, தான் இழந்த பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்ள பல்கேரியா

முயற்சிக்காது என்ற நம்பிக்கை இதன் மூலம் ருமேனியாவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

பால்கன் மக்கள் ஒரு முகமாயிருந்து வரவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி, துருக்கியிலிருந்து மற்றொரு அறிக்கை வந்திருக்கிறது. ருமேனியாவும், போலந்தும் 1926 ஒப்பந்தப்படி ராணுவக் கூட்டுறவு சம்பாஷணைகளை நடத்தி வருகின்றன.

## கோயரிங் இத்தாலிக்குப் போகிறார்

பீல்ட் மார்ஷல் கோயரிங், தன் ரஜாவைப் பூர்த்தி செய்ய நாளையதினம் இத்தாலிக்குப் போகிறார். அவர்தான் ரீச்ஸ்டாக்கின் அக்ராசனராகையால், உடனே ரீச்ஸ்டாக் கூடாதென்று இதிலிருந்து யூகிக்கப்படுகிறது. கோயரிங், சீக்கிரம் முஸோலினியைக் கண்டு பேசுவாரென்று தெரிகிறது.

## ஜேர்மன் ஆயுத விஸ்தரிப்பு

தன் ஆயுத பலத்தைப் பெருக்குவதென்று ஜெர்மனி தீர்மானித்துவிட்டது. பிரிட்டிஷ்-ஜெர்மன் கடற்படை ஒப்பந்தம் நிராகரிக்கப்படலாம். தென் கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மனிக்குள்ள ஜீவாதார உரிமைகளைப் பிரிட்டன் கௌரவிக்காத பக்ஷத்தில் ஒப்பந்தம் கைவிடப்படுமென்று பத்திரிகைகள் கூறுகின்றன. மற்ற நாடுகளின் நிர்ப்பந்தம் வலுக்க வலுக்க ஜெர்மன் ராணுவ பலமும் வலுக்கத்தான் செய்யுமென்று ஒரு பத்திரிகை கூறுகிறது.

கடற்படை ஒப்பந்தத்தை மீறுவதுபற்றி, தன் சகாக்களை நேற்றிரவு ஹிட்லர் கலந்தாலோசித்தார். திட்டமான முடிவு ஏற்படவில்லை. ஒப்பந்த வரம்புகளுக்கு மேல் கடற் படையைப் பெருக்குவது சாத்திய மில்லையாகையால், விமானப் படையைப் பெருக்க வேண்டும் என்று ஹிட்லர் கூறியதாகத் தெரிகிறது. பாரிஸிலுள்ள ஜெர்மன் ஸ்தானாதிபதி, பெர்லினுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

## மேமேல் ஜேர்மனி வசமாயிற்று

மெமெல் ஜெர்மானியர் விரிவான இறுதிக் கோரிக்கைகளடங்கிய ஒரு யாதாஸ்தை லிதுவேனிய சர்க்காரிடம் சமர்ப்பிக்க உத்தேசித்திருப்பதாக தெரிகிறது. யாதாஸ்து இன்னும் சமர்ப்பிக்கப் படவில்லை யென்று இரு சாராரும் கூறுகின்றனர். கீழ்க்கண்டவை முக்கியமான கோரிக்கைகளாயிருக்கு மென்று தெரிகிறது.

மெமெல் நிர்வாக ஆதிக்கத்தை தபால் தந்தி போக்குவரத்து வசதிகளுடன் துறைமுக நிதியுடன் ஜெர்மனிக்கு மாற்றிவிடவேண்டும். டிஸ்மிஸ் செய்யப்பட்ட சிப்பந்திகள் பழைய சம்பளங்களுடன் மீண்டும் வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட வேண்டும். மெமெலிலிருந்து லிதுவேனியப் படைகளும் போலீஸாரும் வாபஸாக வேண்டும்.

ஜெர்மனியின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, உடனே மெமெலை ஒப்படைப்பதென்று சர்க்கார் தீர்மானித்துவிட்டதாகத் தெரிகிறது. யூதர்களும் லிதுவேனியர்களும் மெமெலிருந்து அவசர அவசரமாய் திகிலுடன் வெளியேறுகின்றனர்.

# உள்நாட்டுச் செய்திகள்

## தாதா லேக்ராஜ் ஒப்புக்கொள்ளுகிறார்

விசேஷ கோர்ட் தீர்ப்பளிக்கும் வரை தான் தனது ஆண் சிஷ்யர்களுடன் ஓம் மண்டலி கட்டிடத்திற்குள் வசிக்காமல் விலகியிருப்பதாக தாதா லேக்ராஜ் ஒப்புக்கொண்டிருக்கிறார். விசேஷ கோர்ட்டில் உதவி ஜுடிஷியல் கமிஷனர் ஸ்ரீ. லொபோவும் மாஜி நீதிபதி திவான்பகதூர் கலுமால் பலுமாலும் அந்தரங்கமாக விசாரணை நடத்துவார்கள். சிந்து அசெம்ப்ளியில் ஹிந்து அங்கத்தினர்கள் கிளர்ச்சி செய்து உறுதியுடனிருந்த தன் விளைவு இது என்று கருதப்படுகிறது.

## கப்பல், ரயில்வே கம்பெனிகளை எதிர்த்துக் கிளர்ச்சி

கப்பல், ரயில்வே கம்பெனிகளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ததாக தில்புருகார் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. கேதார்நாத் கோஸ்வாமியும் இன்னும் 14 பேரும் போலீஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஸ்திரீ தொண்டர்கள், லயனில் படுத்துக்கொண்டு மறியல் நடத்தினராம்.

## பெடரல் கோர்ட்டில் ரூ. 7-8-0 க்கு, கிரிமினல் அப்பீல்

பஞ்சாப் மாகாண உத்தியோக வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு ஸப்-அஸிஸ்டெண்ட் ஸர்ஜனை, டாக்டர் ஹரிராம் சிங் என்பவர்மீது, அவர் ரூ. 7-8-0 பெறுமான மருந்துகள் விஷயமாக நம்பிக்கை மோசம் செய்தார் என்று மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் 6மீ சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தம் உத்தியோகக் கடமைகளைச் செய்யும்போது ஏற்படும் குற்றங்களுக்காக, கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டால் அதற்கு முன்னதாக கவர்னரின் அனுமதி பெறவேண்டும் என்று கூறும் இந்திய அரசியல் சட்டத்தின் 270 (1) ஷரத்துப்படி இவ் வழக்கில் பூர்வாங்க அனுமதி (சாங்கிஷன்) பெறாமலே பிராசிக்யூஷன் நடந்ததால், அது செல்லுபடி யாகாதென்று டாக்டர் ஹரிராம்சிங், ஸெஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் செய்தார். செஷன்ஸ் நீதிபதி, அந்த அப்பீல் வாதத்தை ஏற்றுக் கொண்டு மாஜிஸ்டிரேட்டின் தீர்ப்பை ரத்துச் செய்தார். இந்த அப்பீல் தீர்ப்பின்மீது, சர்க்கார் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்ததில், செஷன்ஸ் தீர்ப்பு ரத்தாயிற்று. மாஜிஸ்டிரேட் தீர்ப்பு ஊர்ஜிதமாயிற்று. இந்த ஹைக் கோர்ட் தீர்ப்பின்மீது, பெடரல் கோர்ட்டில் மார்ச் 20-ந் தேதி யன்று ஒரு அப்பீல் வந்துள்ளது.

## பட்டேல் கேட்டிற்கு மூன்று கொடிகள்!

இப்பொழுது பட்டேல் கேட்டின்மீது மூன்று கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றன. ஒன்று பழைய காங்கிரஸ் கொடி. இன்னொன்று நேற்று வந்த முஸ்லீம் லீக் கொடி. மற்றொன்று சிகப்புக் கொடி. லீக் கொடியைப் பறக்க விடுவதை முனிசிபல் தலைவர் அனுமதித்தாராம். புதிதாக வந்த சிகப்புக் கொடியைத் தொழிலாளர்கள் பறக்கவிட்டிருக்கின்றனர். ஆனால், தொழிலாளர் யூனியன் இதை ஆதரிக்கவில்லை.

## ஹரிஜனங்களுக்குப் பிரதிநிதித்துவம்

மகாத்மா காந்தியின் விருப்பப்படி, பீஹார் மந்திரி சபை தமது முனிசிபல் திருத்த மசோதாவில் ஹரிஜனங்களுக்கு முனிசிபாலிடிகளில் அவர்களது ஜனத்தொகை விதாசாரப்படி ஸ்தானங்களை ஒதுக்க (ரிசர்வ் செய்ய) தீர்மானித்திருக்கிறது.

## அ. இ. கா. கமிட்டிக் கூட்டம்

அடுத்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை அலகாபாத்தில் நடத்தும்படி, அலகாபாத் நகர காங்கிரஸ் கமிட்டி அழைத்திருக்கின்றது.

மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தேக அசௌக்யத்துடன் அலகாபாத்தில் இருக்கிறார். அவரைப் பார்ப்பதற்காக, காந்திஜி இங்கு வர உத்தேசித்திருக்கிறார். அவர் இங்கு வரும் தேதியும், அ. இ. கா. கமிட்டி கூடும் தேதியும் ஒன்றாயிருந்தால், கூட்டத்தை அலகாபாத்திலேயே நடத்தக்கூடும்.

## காலட்டில் 60 பேர்கள் கைது

காலட் சமஸ்தான தேசீயக் கக்ஷியைச் சேர்ந்த 60 பேர்கள் காலட் கானைப் பார்ப்பதற்காக, பல இடங்களிலிருந்தும் நேற்று வந்தார்கள். வந்தவுடன் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களுடன் வந்த சில ஜமியத்-உல்-உலமாக்காரர்களும் கைது செய்யப்பட்டனர். கடுமையான வரிகளை ரத்துசெய்ய வேண்டுமென்பதும், ஏதாவது ஒரு மாதிரியான பொறுப்பாட்சி கொடுக்க வேண்டும் என்பதுமே தேசீயக் கக்ஷியின் கோரிக்கைகள்.

## எல்லைப்புற ஹிந்துக்கள் துயரம்

டேரா இஸ்மேல்கானிலிருந்து ஹிந்துக்களின் தூது கோஷ்டியொன்று டில்லிக்கு வந்திருக்கிறது. முஹரம் கலகங்களாலும், மலைவகுப்பினரின் சூறைகளாலும் தங்களுக்கேற்படும் கஷ்டங்களைப் பற்றி அவர்கள் வெளி நாட்டு இலாகா காரியதரிசி சர். ஆப்ரே மெட்காப்பிடமும், காங்கிரஸ் தேசீயக் கட்சி மெம்பர்களிடமும் முறையிட்டார்கள். காந்திஜியைச் சந்திக்கவும் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## உப்பு வரி குறையுமா ?

மத்ய அசெம்பிளியில், நிதி மசோதாவில் உப்பு வரியை மணங்கு 1-க்கு 4-அணா, குறைக்க வேண்டுமெனக் காங்கிரஸ்கட்சி சார்பாக ஸ்ரீ. அனந்தசயனமய்யங்கார் கொண்டுவந்த திருத்தப் பிரேரணை மெஜாரிட்டி வோட்டுகளால் நிறைவேறியது.

## சைகிள்காரர்கள் கவனிக்க

சென்னை போக்குவரத்து விதிகள் சம்பந்தமாக, சென்னை சர்க்கார் செய்துள்ள விதிகளில் ஒவ்வொரு சைகிளுக்கும் முன் பக்கம் லைட் இருக்க வேண்டுமெனவும், பின்புறம் மட்கார்டில் ரிப்ளக்டர் (சிகப்பு) வைக்கப் பட்டால், 15 அங்குலம் நீளம் வெள்ளை வர்ணம் பூசப்பட வேண்டுமெனவும் திருத்தங்கள் செய்துள்ளனர்.

# மகாத்மாவின் மணிவாக்கு

## உபவாசம் இருப்பதெப்படி ?

"உபவாசமிருப்பது ஆதிமுதலில் இருந்துவரும் ஒரு ஏற்பாடு. ஆத்ம சுத்திக்காகவோ, கண்யமான அல்லது இழிவான லட்சியங்களுக்காகவோ, பலர் உபவாசம் இருந்திருக்கிறார்கள். புத்தர், இயேசுநாதர், முகமத் நபி முதலியவர்கள் பகவானை நேரில் கண்டு தரிசிப்பதற்காக உபவாஸ மிருந்த துண்டு. தன் வானர ஸைன்யத்துக்கு, கடல் வழி விடுவதற்காக ஸ்ரீ ராம சந்திரன் பட்டினி இருந்தார். மகா தேவனையே பர்த்தாவாகப் பெறுவதற் காக உபவாஸத்தை மேற்கொண்டனள் பார்வதி. இவற்றை யெல்லாம் விடக் கேவலமான லக்ஷியங்களுக்காக அவர்களுடைய உதாரணத்தை நானும் பின்பற்றியிருக்கிறேன்.

### ராஜ்கோட் உபவாஸம்

நான் உபவாஸத்தை மேற்கொண்டது சரியா, அல்லவா என்பதைப் பற்றி இங்கு விவாதிக்க உத்தேசிக்கவில்லை. ஆனால், இதைப்பற்றி ஒரு கேள்விக்கு மட்டில் பதில் கூறுகிறேன். நான் சிவ கிராமத்தை விட்டுப் புறப்படும்போது உபவாஸமிருப்பதென்ற எண்ணத்துடன் கிளம்பினேனோ என்று கேட்கப்படுகிறது. கொஞ்சகாலமாகவே பட்டினி கிடந்து நான் கோழையாய் விட்டேன். 1933 ஆகஸ்ட் மாதத்தில் நான் மேற்கொண்ட உபவாஸம் குறுகியதாகத்தான் இருந்தது. ஆனால், என்னை அது சித்திர ஹிம்சை செய்துவிட்டது. நான் விடுதலையடைந்த தினத்தன்றே மரணத் துக்குத் தயாராகத் தொடங்கினேன். என்னிடமிருந்த மருந்துகளில் பல வற்றை என்னைப் பராமரித்து வந்த நர்ஸிடம் கொடுத்துவிட்டேன். அது முதல் உபவாஸமென்றால் எனக்கு நடுக்கமாய் இருந்து வந்திருக்கிறது.

ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல் மீ 6, 13 தேதிகளில் 24 மணி நேரம் உபவாஸம் இருப்பதிலிருந்து, நீடித்த உபவாஸத்தைத் தாங்கும் வலிமை என்னிடமில்லையென்பது தெரிந்துவிட்டது. எனவே, நான் சிவ கிராமத் திலிருந்து கிளம்பியபோது, ராஜ்கோர்ட்டில் உபவாஸம் இருக்கவேண்டி இருக்கலாமென்ற இலேசான எண்ணம் எதுவும் மனத்திலிருக்கவில்லை. அம்மாதிரி ஏதாவது சங்கல்பம் செய்துகொள்ளும் பக்ஷத்தில் முன் கூட்டியே அறிவித்துவிடுவதாக நண்பர்களுக்கு நான் வாக்குறுதி செய்து கொடுத்திருக்கிறேன்.

எனவே, இந்த உபவாசம் முன் யோசனையுடன் அனுஷ்டிக்கப்பட்ட தல்ல. திடீரென்று உபவாச எண்ணம் உதித்தது. ஆத்மாவின் கடுமை யான தவிப்பிலிருந்து அது கிளம்பியது. உபவாஸத்தை மேற்கொள்வ தற்கு முந்திய தினங்களில் ஆழ்ந்த பிரார்த்தனைகள் நடந்தன. உபவாஸம் இருப்பதென்று சங்கல்பம் செய்து கொள்வதற்கு முந்திய நாளிரவு தொண் டையில் ஏதோ தடைபட்டிருப்பது போல் திணறினேன். என்ன செய்வ

தென்று எனக்குப் புலப்படவில்லை. மறுநாள் காலையில்தான் என்ன வானாலும் சரியென்று துணிந்து இறங்க வழி புலப்பட்டது.

நான் உபவாஸம் இருக்கவேண்டியது பகவானின் திருவுள்ளம் என்ற நம்பிக்கை ஏற்பட்டிராவிடில் அதில் இறங்கியிருக்கமாட்டேன். ராஜ்கோட் உபவாஸத்தைப்பற்றி நான் சொல்லவேண்டியது அவ்வளவுதான். ஸத்தியாக்கிரயினிடமுள்ள ஆயுதங்களில் உபவாஸம் சக்தி மிகுந்தது. அதைப் பிரயோகிக்க ஒவ்வொருவராலும் முடியாது. வேண்டிய தேக பலம் மட்டும் இருப்பது, உபவாஸம் இருப்பதற்குப் போதிய யோக்கியதாம்சமாகாது. பகவானிடம் உண்மையான நம்பிக்கை இராவிடில் உபவாஸத்தினல் பயனேற்படாது. அது, பிறரைப் பார்த்து அப்படியே இயந்திரம் போல் அனுஷ்டிக்கக்கூடிய உபாயமல்ல.

ஆழ்ந்த ஆத்ம பரிசோதனையிலிருந்து அது பரிமளிக்கவேண்டும். ஆகையால்தான் அது மிகவும் அபூர்வமாய் இருப்பது. நான் அதற்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருப்பதுபோலத் தோன்றுகின்றது. ராஜீயத் துறையிலுள்ள என் சகாக்களில் ஒருவருக்கேனும் உபவாஸம் செய்ய வேண்டுமென்று தோன்ருமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

என் உபவாஸங்களுக்காக அவர்கள் ஒருகாலும் வருத்தப்படவில்லை என்பதை நான் மகிழ்ச்சியுடன் சொல்லக்கூடும். ஏதோ சிற்சில சந்தர்ப்பங்கள் நீங்கலாக உபவாஸ உணர்ச்சி ஆசிரம வாசிகளுக்கும் ஏற்பட்டதில்லை. எவ்வளவுதான் அவர்களுடைய ஆத்மா வற்புறுத்தி அழைத்தாலும் என் அனுமதியின்றி, பிராயச்சித்த முறையில் உபவாஸங்களை மேற்கொள்வதில்லை என்ற நிர்ப்பந்தத்தை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். எனவே, இந்த ஆயுதம் எவ்வளவுதான் சக்தி வாய்ந்ததாய் இருந்த போதிலும், அதற்கு மிகவும் கடுமையான வரம்புகளுண்டு. முன்னடியே பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே அவற்றை மேற்கொள்ளவேண்டும். என்னுடைய நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு, சீர்தூக்கிப் பார்த்தால் பெரும்பான்மை உபவாஸங்களை ஸத்தியாக்கிரக உபவாஸங்கள் என்று கருதமுடியாது. முன்னேற்பாடும் போதிய யோசனையுமில்லாமல் மேற்கொள்ளும் பட்டினிகள், கொஞ்ச நஞ்சமிருந்த சக்தியையும் இழந்து கேலிக் கிடமாகத்தான் முடியும்."

## உபவாசத்தின் புனிதத்தன்மை

"சத்தியாக்கிரகத்தைப் போல் உபவாச விரதமும், இந்தக் காலத்தில் மிகவும் துஷ் பிரயோகம் செய்யப்படுகிறதென்பதை நான் அறிவேன். ஒன்றுமில்லாததற் கெல்லாம் உபவாசம் ஆரம்பித்து விடுகிருர்கள். பல சமயங்களில் இந்த உபவாசங்களுக்குப் பின்னல், பலாத்கார சிந்தனைகள் இருக்கின்றன. அர்த்தமில்லாமல், இப்படி "இமிடேஷன்" செய்வதைத் தடுப்பதற்காகவாவது நான் உபவாசம் ஆரம்பிக்கக் கூடாதென்று முதலில் தயங்கினேன். ஆனல், அந்தராத்மாவின் ஆக்ஞையை யாரால் மீறவது சாத்யம்? ஆகையால், இனிமேல் யாராவது உபவாசம் அனுஷ்டிக்க விரும்பினல், நிஜமான குறைகளுக்காகவோ, கற்பனை செய்து கொள்ளும் குறைகளுக்காகவோ என்னைக் காப்பி அடிக்க வேண்டாமென்று நான் எச்சரிக்கத்தான் வேண்டும்.

சில உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன. எப்போதாவதுதான் அவற்றை உட்கொள்ளலாம். அதுவும் நல்ல தேர்ச்சி பெற்றவரைக் கேட்டுக்கொண்டுதான் செய்யவேண்டும். உபவாசமும் அதைப் போலவேதான். எல்லோருமே தங்களை நிபுணர்க ளென்று நினைத்துக் கொள்ளுவது தவறானது ; பாபமுங்கூட. ஆத்ம சுத்திக்காக அதி பால்யத்திலேயே நான் உபவாசத்தை மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டேனென்பதைப் பொது ஜனங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். அப்போது, தவறான பாதையில் சென்ற என் மகன் ஒருவனுக்காக, பல தினங்கள் உபவாசம் இருந்தேன். இதற்குப் பிறகு என் அருமை நண்பர்களில் ஒருவரின் குமாரத்தி, தவறான பாதையில் சென்றதற்காக இன்னும் நீண்ட உபவாசம் ஒன்றை அனுஷ்டித்தேன். அந்த உபவாசங்களின் பலன், உபவாசம் நியாயமானதுதான் என்பது ருசுவாயிற்று.

முதன் முதலில் நான் பகிரங்கமாக உபவாசத்தை அனுஷ்டிக்க ஆரம்பித்தது தென் ஆப்பிரிக்காவில். அங்குள்ள இந்தியத் தொழிலாளர்களின் கஷ்டங்கள் சம்பந்தமாக உபவாசம் இருந்தேன். என்னுடைய உபவாசப் பரீக்ஷை ஒன்றாவது பலன் அளிக்காமற் போனதாக எனக்கு ஞாபகம் இல்லை. அத்துடன் அந்த உபவாச காலங்களில் எனக்கு எவ்வளவோ மன நிம்மதியும், சந்துஷ்டியும் ஏற்பட்டிருக்கின்றன. முடிவாக, உபவாசம் இருப்பது ஆண்டவனின் ஆக்ஞையாக இருந்தாலொழிய, அது பிரயோஜன மில்லாத பட்டினி என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்"

---

## காரியத்தில் கண்ணாக இருங்கள்

கதர், கிராமங்களுக்கே புத்துயிர் அளிப்பதோடு, பஞ்ச இன்ஷுரன்ஸுக்கு அருமையான ரூபத்திலிருக்கிறதென்பதைத் தமிழ்நாடு, பீஹார், ஹிஸ்ஸார் மூன்றும் யாதொரு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துவிட்டன. அகில இந்திய சர்க்கா சங்கம், நூற்கிறவர்களின் கூலிகளைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்தியது, கிராமங்களிலுள்ள கோடிக் கணக்கான மாதர்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை யூட்டியிருக்கிறது. வேலை வேண்டும், வேலை வேண்டுமென அவர்கள் அகில இந்திய சர்க்கா சங்க டெப்போக்களுக்கு வந்து குவிகிறார்கள். ஆனால் அந்த டிப்போக்களில் விலையாகாத கதர் துணிகள் இருக்கின்றன. காங்கிரஸ்காரர்களும் இதரர்களும் கதர் ஸ்டோர்களிலிருந்து கதரைக் காலியாக்கி, அதன்மூலம் அ. இ. சர்க்கா சங்கம் நூற்க ஆவலாயுள்ளவர்களுக்கு வேலை கொடுக்கும்படிச் செய்யமாட்டார்களா? புது கூலித் திட்டம் எதிர்பார்த்ததற்கு மேலாக வெற்றியடைந்திருக்கிறது. இதிலும் சரி, நாம் நமது மனசாட்சிக்கும், வாயில்லாப் பூச்சிகளான பல்லாயிரக்கணக்கான கிராமவாசிகளுக்கும் உண்மையாக நடந்து கொள்வோமாக. இந்தக்கிராமவாசிகளுக்குச் சேவைபுரியவே அகில இந்திய சர்க்கா சங்கமும், அ. இ. கிராம கைத் தொழில் சங்கமும் நிறுவப்பட்டிருக்கின்றன. வேலை செய்கிறவர்களுக்கு வாடி வருந்தக்கூடிய அவ்வளவு குறைவான கூலிகளைக் கொடுத்து, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை யோக்யத்தன்மையற்ற நபர்கள் விற்கப் புறப்பட்டால், நான் கூறிய இரு சங்கங்களின் கூலித் திட்டம் வெற்றிகரமாக வேலை செய்ய முடியாது. அத்தாட்சி பெற்ற கடை

களில் மாத்திரம் கதரையும், கிராமக் கைத்தொழில் சாமான்களையும் வாங்குவதின் மூலம், பொது ஜனங்கள், இந்த மோசடியிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

* * * * *

நான் உபவாசமிருப்பது திரிபுரியில் காங்கிரஸ்காரர்களைக் கலவரப்படுத்தக் கூடாது. ஆனால், சத்தியம் சாத்வீகம் இந்த இருவழிகளிலும் நாமே நமது கதி மோக்ஷத்திற்கு வேலை செய்யவேண்டுமானால், ஒவ்வொரு நுணுக்கமான விஷயத்தையும் டெலிகேட்டுகள் கவனிப்பது மிகவும் அவசியமாகும். ஜனங்களின் அளவு கடந்த அன்பை நான் பெரிதும் மதிக்கிற போதிலும், என்னுடைய உயிரைக் காப்பாற்றவேண்டுமென்ற கவலையானது தேசத்தின் பிரதான வேலையிலிருந்து கவனத்தை இழுத்துவிட்டால், என் உயிர் இருந்தும் 'பிரயோஜனமில்லை யென்பதை அவர்கள் (டெலிகேட்டுகள்) உணரட்டும்.''

---

# ஸ்ரீ ஸுபாஷின் போர் முறை

## ஏகாதிபத்தியத்தை எதிர்க்க ஒன்று சேருங்கள்

மார்ச் மாதம் 10-ந் தேதியன்று திரிபுரியில் 52-வது தேசிய காங்கிரஸ் மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீ. சுபாஷ் சந்திரபோஸ் செய்த அக்கிராசனப் பிரசங்கத்தின் சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

"நண்பர்களே! நான் வேறு விஷயங்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்குமுன், ராஜ்கோட்டையில் மகாத்மா காந்தி பெற்ற வெற்றியையும், அதனால் அவரது உபவாச விரதம் பூர்த்தியானதையும் பற்றி, நமது சந்தோஷத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந் நாடு முழுதும் இன்று பெரும் அலையினின்று வெளியேறி பெரும் ஆனந்தத்தை அடைந்திருக்கிறது.

இவ் வருஷமானது ஒரு விதத்திலல்ல, பலவிதங்களில் அசாதாரணமாகவும் நூதனமாகவும் இருக்கும்போல் தோன்றுகிறது. இவ் வருஷம் அக்கிராசனர் தேர்தல் எப்போதும்போல சர்வ சாதாரணமான முறையில் நடைபெறவில்லை. தேர்தலுக்குப் பிறகும் பரபரப்பு மிகுந்த பல சம்பவங்கள் விளைந்தன. அக்கிராசனராக திரிபுரியில் வந்து இறங்கினவர் ஒரு நோயாளியாக வந்து இறங்கினர். இவ்வளவையும் பார்க்கும்போது அக்கிராசனப் பிரசங்கம் விஷயத்திலும் வழக்கத்துக்கு மாறாக மிகவும் சுருக்கமாக இருப்பது பொருத்தமானதே யாகும்.

எகிப்திலிருந்து வபத் கட்சியின் தூது கோஷ்டியினர் இங்கு, இந்திய தேசிய காங்கிரஸின் விருந்தாளிகளாக நம்மிடையே வந்திருப்பதானது, எனக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கிறது. நம் நாட்டார் சார்பாக அவர்களுக்கு நான் நல்வரவு கூறுகிறேன்.

1938 பிப்ரவரியில் நாம் ஹரிபுரம் காங்கிரஸ் கூடின பிறகு சர்வ தேசிய விவகாரங்களில் மிகவும் அர்த்த புஷ்டியுள்ள பல முக்கிய சம்பு

வங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது 1938 செப்டம்பரில் ஏற்பட்ட மூனிச் ஒப்பந்தம். உண்மையில் அதன் கருத்து பிரிட்டிஷ் பிரெஞ்சு ஏகாதிபத்தியங்கள், நாஜி ஜெர்மனியிடம் பரிபூர்ண சரணுகதி அடைந்தன என்பதேயாம். அதன் பயனுக, ஒரு குண்டுகூட சுடவேண்டிய அவசியமின்றி ஜெர்மனி ஐரோப்பா முழுவதிலும் தன் செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் ஸ்தாபித்துவிட்டது. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் சர்வதேசிய விவகாரங்களில் ஏற்பட்ட பல நிகழ்ச்சிகளால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் பலத்திலும் க்யாதியிலும் மிகவும் சோர்வுற்றிருக்கின்றன வென்பது சந்தேகமற்ற உண்மை.

முதன் முதலாக, நான் இப்போது சிறிது காலமாக என் மனத்தில் தோன்றியுள்ள ஒரு உணர்ச்சியைத் தெளிவாகவும் நிஸ் ஸந்தேகமாகவும் சொல்லிவிடவேண்டும். அதாவது, நாம் நமது சுயராஜ்யப் பிரச்னையைக் கிளப்பி, நமது தேசியக் கோரிக்கையைப் பிரிட்டிஷ் சர்க்காரிடம் ஒரு இறுதிக் கடித ரூபத்தில் சமர்ப்பிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. நாமாகப் போராட்டத்தைக் கிளப்பாமல், சும்மாயிருந்து சமஷ்டித் திட்டம் நம்மீது புகுத்தப்படும் போது நாம் பார்த்துக்கொள்ளுவோம் என்று வாளாவிருக்கக்கூடிய காலம் போய் நெடுங்காலம் கடந்துவிட்டது.

ஆகையால் நாம், நமது தேசியக் கோரிக்கையை ஒரு இறுதிக் கடித ரூபத்தில் பிரிட்டனிடம் சமர்ப்பித்து, ஒரு வாய்தாவும் குறிப்பிட வேண்டும். அந்த வாய்தாவுக்குள்ளாக, நமது கோரிக்கைக்குப் பதிலளிக்க வேண்டுமென்றும் அதில் சொல்லவேண்டும். அந்த வாய்தாவுக்குள் பதில் கிடைக்க வில்லையானல், அல்லது கிடைக்கும் பதில் திருப்தியளிக்க வில்லையானல், நாம் நமது தேசிய கோரிக்கை நிறைவேறுவதற்கு நம்மிடமுள்ள சகல பலத்தையும் நிர்ப்பந்தத்தையும் பிரயோகிக்கத் தலைப்படவேண்டும்.

நாம் மட்டும் நமது வித்தியாசங்களை மறந்தொழித்து, எல்லோருடைய சக்திகளையும் ஒன்ருகச் சேகரித்து தேசிய போராட்டத்தில் முழு ஆர்வத்துடன் அந்தச் சக்தியைப் பிரயோகிப்போமாயின், இப்போதுள்ள அநுகூலங்களைப் பூர்ணமாகப் பயன்படுத்த முடியும். இது போன்ற அரிய தருணத்தை விட்டுவிட்டால், பிறகு மறு தருணம் ஒரு தேசத்தின் வாழ்வில் கிடைப்பது துர்லபம். இன்று பிரிட்டிஷ் ஆதிபத்ய அதிகாரம், பல இடங்களில் சமஸ்தான அதிகாரிகளுடன் கூட்டுறவு ஏற்படுத்திக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். இந்த நிலைமையில், காங்கிரஸ்காரர்களாகிய நாம், சமஸ்தானத்திலுள்ள ஜனங்களுடன் நெருங்கி ஒத்துழைக்க வேண்டாமா ?

சமஸ்தானங்களில் பிரஜா உரிமைக்காகவும், பொறுப்பாட்சிக்காகவும், வழி காட்டி நடத்திவைக்கும் வேலையைக் காரியக் கமிட்டியாலேயே சரியாக நிர்ணயிக்கப்பட்ட முறைகளுடன் கட்டுப்பாடாக நடத்தப்பட வேண்டும். இதுவரைக்கும் அங்கு செய்யப்பட்டுள்ள வேலை யெல்லாம் சில்லரை சில்லரையாகவே தனித் தனி சிறு காரியங்களுக்காகவே செய்யப்பட்டிருக்கிறது. ஒரு திட்டமோ முறையோ இல்லாமலேதான் காரியம் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது காரியக் கமிட்டி நேரில் பொறுப்பேற்று இதற்கென்று தனியாக ஒரு சப்-கமிட்டியும் நியமிக்கவேண்டும். இவ் விஷயத்தில் காந்திஜியின் புத்திமதியையும், ஒத்துழைப்பையும், அகில

இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டின் ஒத்துழைப்பையும் பூர்ணமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக நாம் எல்லா ஏகாதிபத்ய எதிர்ப்பு ஸ்தாபனங்களுடனும், முக்கியமாக கிஸான் இயக்கத்துடனும், தொழிற்சங்க இயக்கத்துடனும் நெருங்கிய ஒத்துழைப்புடன் வேலை செய்யவேண்டும். தேசத்தில் தீவிரப்போக்குள்ள எல்லா இயக்கங்களும் நெருங்கின ஒத்துழைப்புடனும் இணக்கத்துடனும் வேலை செய்யவேண்டும். ஏகாதிபத்ய எதிர்ப்பு ஸ்தாபனங்கள் எல்லாவற்றின் முயற்சிகளும் ஒரே இறுதிப் போராட்டமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தைத் தாக்குவதில் ஒன்றாகக் கூடவேண்டும். நண்பர்களே! இன்று காங்கிரஸுக்குள் ஆகாயம் இருள் மேகங்கள் படர்ந்ததாக இருக்கிறது; வேற்றுமைகள் தோன்றியிருக்கின்றன. ஆகையால், நம் நண்பர்கள் பலர், மனச் சோர்வும், மன வாட்டமும் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நான் எப்போதும் நல்லதே வரும் என்று நம்பும் சுபாவமுள்ளவன். சற்றேறக்குறைய இதே போன்ற நிலைமை 1923-ல் கயா காங்கிரஸின் போது இருந்தது. எனது குருநாதனது (சித்தரஞ்சன் தாஸ்) ஆத்மாவும் மோத்திலாலின் ஆத்மாவும், மற்ற பெரியார்களின் ஆத்மாவும் இப்போதேற்பட்டுள்ள நெருக்கடியில் நமக்கு நல்ல பாதையைக் காட்டுவதாகுக! நம்முடனிருக்கும் மகாத்மா காந்தியும் நமக்கு வழி காட்டி உதவிசெய்து, காங்கிரஸானது இப்போதுள்ள சிக்கலினின்று வெளியேற உதவி செய்வாராக. இதுவே என் பிரார்த்தனை.''

வந்தேமாதரம்.

---

# நம் ஒப்பற்ற தலைவர் காந்திஜியே!

## அவரால்தான் நாம் முன்னேற இயலும்

"இப்போது ஆற்றங்கரையில் இரண்டு படகுகள் காணப்படுகின்றன. ஒன்று பழைய படகு; நல்ல விசாலமான படகு. இதை மகாத்மா காந்தி ஓட்டுகிறார்.

மற்றொருவர், புதிய படகு ஒன்றைக் கொண்டுவந்திருக்கிறார். புதிய படகுக்கு, பளபளப்பாக சாயம் பூசியிருக்கிறார்கள். கொடி, தோரணம் முதலியவைகளையும் கட்டி சிங்காரம் செய்திருக்கிறார்கள். 'என் படகில் ஏறுங்கள்' என்று அந்தப் புதிய ஆள் கூப்பிடுகிறார்.

மகாத்மா காந்தி, நல்ல அனுபவம் வாய்ந்த தோணிக்காரர். மேடு பள்ளம் இருக்குமிடங்கள் அவருக்கு நன்றாகத் தெரியும். இவைகளெல்லாவற்றையும் கடந்து அவர் ஜாக்கிரதையாக நம்மைக் கரை சேர்த்துவிடுவார்.

புதுப்படகு ஓட்டைப்படகு என்று எனக்குத் தெரியும். ஆகையால், புதுப்படகில் ஏறினால் எல்லோரும் ஆற்றில் மூழ்க வேண்டியதுதான். நர்மதை நதி ரொம்ப ஆழமானது.

'என் படகில் நீங்கள் ஏற முடியாதென்றால், என் படகையும் உங்கள் படகுடன் சேர்த்துக் கட்டிக்கொள்ளுங்களேன்' என்று புதிய ஆள் சொல்லு

கிறார். இதுவும் சாத்தியமில்லாத காரியம்தான். ஒரு ஓட்டைப்படகை நல்ல படகுடன் சேர்த்து கட்டிக்கொண்டு போனால், அதற்குள் ஜலம் புகுந்து, அந்தப் பாரத்தில் நாமும் மூழ்கிவிடுவோ மாதலால், அதற்கும் சம்மதிக்க முடியாது.

நமக்கு ஒரே ஒரு தலைவர்தான் உண்டு. அந்தத் தலைவர் மகாத்மாகாந்தி தான். அவர், சொல்லுவதைச் செய்யக்கூடிய யுள்ளவர். ஆகையால் அவரைத் தான் நாம் பின்பற்றியாகவேண்டும். அவர் சொல்வது குறைவாயிருக்கும். ஆனால், செய்வது அபாரமாயிருக்கும். அவரை நம்புங்கள். அவர் பத்திரமாக நம்மைக் கரை சேர்த்துவிடுவார். காந்திஜியின் படகு ஒன்றில்தான் நாம் ஏற முடியும். அவர் எவ்வளவு அனுபவம் பெற்றவர்? நமக்குத் தெரிந்து சென்ற 35 வருஷங்களாக அவர் நம்மை நடத்தி வந்திருக்கிறார். அவர் தலைமை திருப்திகரமாய்த்தான் இருந்திருக்கிறது.

வானத்தை வில்லாய் வளைத்து விடுகிறேமென்ற பெரிய வார்த்தைகளைக் கண்டு ஏமாந்துபோய், ஓட்டைப் படகில் ஏறிவிடாதீர்கள். கொஞ்ச நேரம் புதுப்படகில் ஏறிப்பார்த்துவிட்டு, பிறகு பழைய படகுக்கு வந்து விடலாமென்று நினைக்காதீர்கள். ஏனென்றால், ஓட்டைப் படகில் ஏறினால், திரும்பி வந்து நல்ல படகில் ஏறும் வரையில் நாம் உயிருடனிருக்கமாட்டோம். அதற்குள் ஓட்டைப்படகு கவிழ்ந்து விடும். மகாத்மாவை நம்புங்கள். ஒருகால் நாம் தனித் தனியாகவே நீந்தினால் கரை சேரக்கூடும். ஆனால், எல்லோரும் சேர்ந்து கும்பல் போடுவதாயிருந்தால், எல்லோருமே மூழ்கி விடக்கூடும். (நீண்ட கரகோஷம்) நாம் ஸ்வராஜ்யம் பெறவேண்டுமென்று விரும்பினால், பலாத்காரத்தையும் ஏமாற்றுவதையும் உபயோகித்துப் பெறக்கூடாது. நாம் காங்கிரஸைப் பலப்படுத்த விரும்பினால் பரஸ்பரம் ஏமாற்றுவதையும் சந்தேகத்தையும், பலாத்காரத்தையும் மூட்டை கட்டி ஒரு பக்கத்தில் வைத்துவிட வேண்டும். லஞ்சம், போலி மெம்பர்கள் மூலம் நாம் காங்கிரஸைப் பலப்படுத்த முடியுமென்று நினைத்தால், நாம் ஏமாற்றமடையப் போவது நிச்சயம். மோசடியின் மூலம் நாம் ஒருநாளும் பலம்பெறமுடியாது. 'காந்திஜிக்கு ரொம்ப சக்தியிருக்கிறது. ஆகையால், அவர் சொற்படி கேட்போம். ஆனால், ரகசியமாக நம் இஷ்டப்படி நடப்போம்' என்று யாராவது சொன்னால், உடனே அந்தப் புத்திமதியை நிராகரித்துவிடுங்கள்.

காந்திஜியின் சக்தி மின்சாரத்தைப் போன்றது. ஏதாவது, ஒரு கம்பியாவது சேதமடைந்து விட்டால், 'கரெண்ட்' பூராவும் போய்விடும். காந்திஜியின் சக்தி, நம்முடைய நாணயத்தையும், உண்மையையும் பொறுத்துத்தான் இருக்கிறது. மகாத்மா, தன் தலையில் ஒரு பெரிய சுமையைத் தூக்கிச் செல்லக் கூடிய சக்தியுடையவர். ஆனால், ஒரு பொய்யைக் கூட அவரால் தாங்கமுடியாது. காங்கிரஸ் எவ்வளவுக் கெவ்வளவு சத்யத்தையும் அஹிம்சையையும் உண்மையாகப் பின்பற்றுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அவருக்குப் பலம். காந்திஜியின் தலைமையில் நாம் ஸ்வராஜ்யம் பெற்றால், சந்தோஷமாய் வாழ முடியும். அப்படியில்லாமல், வேறு வழிகளில் நமக்கு ஸ்வராஜ்யம் வந்தால், நாம் மிருகங்களாய் விடுவோம். நாம், கர்மபலனில் நம்பிக்கையுள்ளவர்கள்"

—ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாசாரியர்.

## நம் கொடி தேசிய கௌரவத்தின் சின்னம்

"தேசியக் கொடி வெறும் முழ நீளத் துணியாக இருக்கலாம். ஆனால், அதற்காகத்தான் ஒவ்வொரு நாட்டிலும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் மகிழ்ச்சியுடன் தங்கள் உயிரையே அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். எதற்காக அப்படிச் செய்தார்கள்? தேசியக் கொடி தேசிய கௌரவத்தின் சின்னம்; தேசிய சுதந்திரத்தின் சின்னம். கொடி யாரைச் சேர்ந்ததோ அவர்களுக்கு அது ஒரு பாதுகாப்பு உணர்ச்சியை ஊட்டியிருக்கிறது. இந்தியாவில், நன்கு சிந்தனை செய்த பின்னரே இந்தத் தேசியக்கொடி தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலிருக்கும் ஒவ்வொருவரின் பிரதிநிதியாகவும் இந்தக் கொடி விளங்குகிறது. இந்தியாவில் இன்னொரு கொடியும் அதாவது பிரிட்டிஷாரின் யூனியன் ஜாக்கும் இருக்கிறது. அது நமது கொடியல்ல. அந்தக் கொடியைப் பிரிட்டனில் கௌரவிக்க நாம் தயாராயிருக்கிறபோதிலும், இந்தியாவில் நமது அடிமைச் சின்னமாகவே அதைப் பாவிக்கிறோம். எனவே நாம் அதை எதிர்த்தே ஆகவேண்டும்.

இந்த நாட்டில் வகுப்புவாதக் கொடிகளும் இன்னும் பல கொடிகளும் இருக்கின்றன. ஆனால், அந்தந்த இடங்களில் அது நல்லதாகவும் இருக்கலாம். கெட்டதாகவும் இருக்கலாம். ஆனால், அது இந்திய மக்கள் அனைவரின் கொடியாகவும் இருக்கமுடியாது. இதற்கு மாறாக தேசியக்கொடி சுதந்திரத்திற்காகவும், ஒரு சில பேர்வழிகளின் ஸ்வராஜ்யத்திற்கில்லாமல் பாமர மக்கள் அனைவரின் சுயராஜ்யத்திற்காகவும் இந்தியாவில் இப்பொழுது கோடிக் கணக்கான மக்களை வாட்டி வரும் வறுமையைப் போக்குவதற்காகவும் போராடி வருகிறது."

—ஸ்ரீ. ஜவஹர்லால் நேரு.

## காந்திஜியே தேசத்தின் தலைவர்

"மகாத்மா காந்தி யோசனைப்படி சென்ற வருஷங்களில் காங்கிரஸ் எந்த அடிப்படையான கொள்கைகள்படி திட்டங்களை வகுத்து வந்ததோ அந்தக் கொள்கைகளில் தனக்குப் பரிபூர்ண நம்பிக்கை இருப்பதாக இந்தக் காங்கிரஸ் தெரிவித்துக்கொள்கிறது. இந்தக் கொள்கைகளில் யாதொரு மாறுதலும் இருக்கக்கூடாது. இந்தக் கொள்கைகளின் படியே எதிர்கால காங்கிரஸ் திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்பதே இந்தக் காங்கிரஸின் திட்டமான அபிப்பிராயம்.

சென்ற வருஷம் வேலை செய்த காரியக் கமிட்டியிடம் நம்பிக்கை இருப்பதை, இக் காங்கிரஸ் தெரிவித்துக்கொண்டு, அக் கமிட்டி மெம்பர்களில் யார் மீதேனும் ஏதாவது அபவாதம் கூறப்பட்டிருப்பதைக் குறித்து தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. வருகிற வருஷத்தில் நெருக்கடியான நிலைமை ஏற்படக்கூடியதை உத்தேசித்தும், அப்பேர்ப்பட்ட நெருக்கடியில் மகாத்மா காந்தி ஒருவரால்தான், காங்கிரஸையும் தேசத்தையும் வெற்றிப் பாதையில் நடத்திச் செல்ல முடியுமென்பதை உத்தேசித்தும், காங்கிரஸ் காரியக் கமிட்டி, காந்திஜியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதாக இருக்க வேண்டுமென, இந்தக் காங்கிரஸ் கருதுகிறது. எனவே, வருகிற வருஷத்துக் காரியக் கமிட்டியில் காந்திஜியின் விருப்பப்படியே மெம்பர்களை நியமிக்குமாறு இந்தக் காங்கிரஸ், அக்கிராசனரைக் கேட்டுக்கொள்கிறது."

(ஸ்ரீ பந்தின் தீர்மானம்.)

## கலக நாடகம்—கபட நாடகம்

வீட்டிலிருக்கும் மீனலோசனியம்மாள், "நம் கணவர் நேரே தம் வீட்டிற்கு வராமல், இம்மாதிரி ரகஸியமாய் வருவதற்குக் காரணம் யாதோ தெரியவில்லையே! கந்தனும் போய் திரும்பி வரும் நேரமாகியும் வரவில்லையே! ஒரு வேளை, பையன் அங்கில்லையா?.... ஒன்றும் புரியாமல் மனம் தவிக்கின்றதே!....ஒருகால் அவர் வஸுந்தராவின் வீட்டிற்குச் சென்றிருப்பாரோ! எதற்கும் வஸுந்தராவுக்கு டெலிபோன் செய்து பார்க்கலாம்" என்று வஸுந்தராவின் நம்பரைத் திருப்பி, "ஹல்லோ! ஹல்லோ! வஸுந்தராவா! என்னம்மா! சவுக்கியமா?"

வஸுந்:—மாமியா! ஏது, என் ஞாபகங்கூட இருக்கிறதா?

மீன:—என்னம்மா இப்படி சொல்றயே! நான் செய்த பாவம்தான் அம்மாதிரி என் ஆசைக் கோட்டை இடிந்தது....உன் மாமாவிட மிருந்து உனக்கு ஏதாவது கடிதம் வருகிறதா?

வஸுந்:—கடிதமா! ஸ்வப்பனம்போல் எப்போதோ ஒன்று வந்தது. ஏன் உங்களுக்கு வருவதில்லையா? டாக்டருக்குக் கூட வருவதில்லையா?

மீன:—ஐயோ! நான் என்ன சொல்வேன் வஸுந்தரா! இப்போது ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேசவே உன்னைக் கூப்பிட்டேன். அங்கு வேறு யாரேனும் இருக்கிறார்களா?

வஸுந்:—இல்லை; என்ன விஷயம்?

மீன:—உன் மாமா ஆத்மநாதன்மீது கடுங் கோபங் கொண்டிருப்பதுதான் உனக்குத் தெரியுமே! அவரை இன்னும் யார் யாரோ கலைத்து, ஆத்மநாதன்மீது இல்லாத பொல்லாத விஷயங்களை எல்லாங் கூறி, மனத்தை மாற்றிவிட்டார்களாம். மகனின் திருட்டைக் கண்டு பிடித்துக் காட்டுவதாய், எந்தப் பாவியோ அவரை நேற்று இவ் வூருக்கு ரகஸ்யமாய் அழைத்து வந்திருக்கிறானாம்.

வஸந் :—என்ன ! உண்மையாகவா....யார் சொன்னது ?

மீன:—நம்ப வேலையாள் கந்தன்தான் சொன்னான். அவனையும் வேலையைவிட்டுத் துரத்திவிட்டாராம். நம்ப வீட்டுக்கு வராமல் அவர் வேறு எங்கு வந்திருப்பார் என்று எனக்குத் தெரியவில்லை. என்ன விபரீதம் நடக்குமோ பயமாயிருக்கிறது. ஒருகால் உன் வீட்டிற்கு வந்திருக்கிறாரோ என்று கேட்கவே கூப்பிட்டேன்.

வஸந் :—எனக்கு ஒன்றுமே தெரியாதே மாமீ! அப்படி அவர் இங்கு வந்தால் நான் சும்மா இருப்பேனா ? அவரை முதலில் நானே உன்னிடம் அழைத்து வந்தல்லவோ மறு வேலை பார்ப்பேன். மாமீ ! நீ கவலைப்படாதே. நான் இதைப்பற்றி விசாரித்துத் தகவல் தெரிவிக்கிறேன். டாக்டர் வீட்டில் இல்லையே.

மீன :—இல்லையம்மா ! எனக்கு எப்படியாவது தகவல் தெரிந்தால் போதும். நான் வரட்டுமா ?—என்றாள். அவளும் சரி என்று ரிஸீவரை மாட்டினாள். மீனலோசனியும் இடிந்துபோய் உட்கார்ந்து விட்டாள்.

வஸந்தாராவுக்கும் இந்தச் செய்தி மிக்க கலக்கத்தையே கொடுத்தது. ஆனால், தன் பிதாவுக்குத் தெரிந்து தான் எதுவும் செய்வதற்கில்லை. எந்தவிதமாக இப்போது இந்த ரகஸியத்தை அறிவது என்ற குழப்பமும் கவலையும் உண்டாகிவிட்டன. 'அவர் கோபத்தில் ஆத்மநாதனுக்கு என்ன தீங்கு இழைத்து விடுவாரோ ! கலகக் கொள்ளிகள் என்னென்ன விபரீதத்தில் கொண்டு மாட்டி விடுவார்களோ !' என்ற பயம் அவளைச் சுற்றிக்கொண்டது.

அப்படிக் குழம்பிக் கிடக்கும் தருணம் அவளுடைய பிதா அங்கு வந்தார். தன்னுடைய மாறுதல்களை எல்லாம் மறைத்துக்கொண்டு, அவருக்கு மரியாதை செய்து உட்கார வைத்தாள்.

தகப்பனார் :—வஸந்தாரா ! இதோ பாரு. கல்கத்தாவிலிருந்து அனந்தராம் கடிதம் எழுதியிருக்கிறார். இதைப் படித்து, பின்னர் நன்றாக யோசித்து பதில் கூறு. நான் போகிறேன்—என்று கூறி விட்டுப் போய்விட்டார்.

வஸுந்தராவுக்கோ அதைப் படிக்கவும் அப்போதுள்ள மன நிலைமையில் பிடிக்கவில்லை. ஆத்மநாதனுக்கு ஒரு விபத்துமில்லாத படி முதலில் தான் கவனிப்பதிலேயே அவள் மனம் நாடியது. ஆகையால், அது விஷயமாகச் சற்று யோசித்தாள்.

வைத்தியநாதன் என்கிற பேர் தெரியாவிடினும் விமலாவுக்கு உறவு ஒருவர் தன் மாமாவின் கிராமத்திலிருப்பதை அவள் எப் போதோ அறிந்திருப்பதால், அவனைப்பற்றியே அவள் மனம் யோசனையில் ஆழ்ந்தது. சில நிமிடங்கள் கலங்கிப் போய்விட்டாள். பிறகு எதையோ யோசனை செய்தவளாய் அக்கடிதத்தைப் பையில் வைத்துக்கொண்டாள்.

பிதாவிடம் சென்று, தான் ஓர் அவசர காரியமாய் வெளியில் சென்று வருவதாயும், வந்த பிறகு பதில் கூறுவதாயும் சொல்லி விட்டு, காரைத் தானே ட்ரைவ் செய்துகொண்டு வேகமாய்க் கிளம்பினாள்.

தைரியத்துடன் விமலாவின் வீட்டிற்குச் சென்று காரை நிறுத்திவிட்டு, சந்தடி செய்யாது உள்ளே சென்றாள். அதே சமயம் சிதம்பரநாதன் கடுங்கோபத்துடன் தத்திக் குதித்துத் தாண்டவ மாடியபடியே பல்லை நெறநெற வென்று கடித்துக்கொண்டே "முடியாது. இனிமேல் முடியவே முடியாது. இந்த அவமானத்தை என்னால் தாங்கமுடியாது. ஒன்று அவன் சாகவேண்டும். இல்லை யேல் நானே சாகவேண்டும். இரண்டுமில்லையேல் என் அண்ணன் அடிச்சுவடியை நான் பின்பற்றவேண்டும். இப்படிப்பட்ட துன்மார்க்கனாக அவனிருப்பான் என்று தெரிந்திருந்தால், அவனை இத்தகைய ஸ்திதிக்கே நான் கொண்டுவந்திருக்க மாட்டேன்" என்று தாறுமாறாகக் கத்தியபடியே, கைகளைப் பின்கட்டு கட்டிக் கொண்டு, கூண்டில் அலையும் சிங்கம்போல் அலைகிறார்.

வஸுந்தராவுக்கு இவருடைய சொற்கள் இதயத்தைப் பிளக் கின்றன. 'பதில் என்ன வருகிறதோ பார்ப்போம்' என்று நிற் கையில் வைத்தியநாதன் கடகடவென்று நகைத்துவிட்டு, "விமலா! எப்படி இருக்கிறது விஷயம் பார்த்தாயா?" என்றான்.

விமலா ஏதோ நடுநிலை நியாயம் பேசுபவளைப்போல், "உம். நான்தான் பார்த்துப் பார்த்து, தலை பொட்டை பறந்துவிட்டதே! இது எனக்கோர் ஆச்சரியமா? எத்தனையோ பெரிய குடும்பங்களில் உள்ள கல்யாணமாகாத பெண்களுக்கும், விதவைகளுக்கும் கருச் சேதப்படுத்தி பொருள்தேடி பாபத்தை மூட்டையாகக் கட்டியிருக் கிறான் அந்த மகானுபாவன். தனது திறமையை அதில்தான் காட்ட வேண்டுமென்று எண்ணிச் செய்த சதிக்கு, தொழில் முறையில் நானுங் கூட உதவி செய்யும்படி விதி யமைந்தது, என் பாவம்: உம்....சனி அந்தப் பேச்சு எதற்கு?"

என்று சலிப்பாய் சொல்லும்போது எதிரில் உள்ள சுவரில் மாட்டப்பட்டிருக்கும் நிலைக் கண்ணாடியில் வஸுந்தரா நிற்பதை அந்தநிர்மூடி பார்த்துவிட்டாள். அவ்வளவுதான். உடனே அவளைத் தூக்கி வாரிப்போட்டு விட்டது.... இமை கொட்டும் நேரம் தம்பித்துப் போய்விட்டாள்.

உடனே சடக்கென்று ஏதோ நினைத்தவளாய், அந்த அறையி லிருந்தே பின்புறம் செல்லும் வழியால் வைத்தியை அழைத்து, "ஐயோ! மோசம் வந்துவிட்டது. உடனே இவரை ஏதேனும் சாக்குசொல்லி, பின்புறமாக அப்புறப்படுத்திவிடுங்கள். வஸுந்தரா இங்கு வந்து நின்று, ஒட்டுக் கேட்கிறாள்" என்று கூறிவிட்டாள்.

இடிவிழுந்தவன் போல் வைத்தி நடுங்கியபடியே, சிதம்பர நாதனைத் தரதரவென்று கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஓடி, "ஐயையோ! காரியம் மிஞ்சிப்போய் விட்டது. உமது மகனை நீர் அடித்து இம்சித்ததாகவும், கூட இருந்தவர்களையும் அடித்துக் காயப் படுத்தியதாகவும் உம்மீது போலீஸில் கம்ப்ளெய்ண்டு கொடுத்து விட்டானும், அந்தப் பாவி. அதோ போலீஸார் வருகிறார்களாம். உமது கவுரவத்திற்கு இந்த ஒரு அவமானமாவது இல்லாமல் தப் பித்துக்கொள்ளும். ஓடி வாரும்" என்று கூறிக்கொண்டே சிறு பிள்ளையை இழுத்துக்கொண்டு போவதுபோல் இழுத்துக்கொண்டு ஓடிப் புறக்கடையில் பசுமாட்டுக்காக வைக்கோல் அடைத்துள்ள அறையில் இருவரும் போய் புகுந்துகொண்டு, வைக்கோலை வாரி தலைமுதல் கால்வரையில் மூடிக்கொண்டார்கள்.

சிதம்பரநாதனின் காதுக்கு, தானிருக்கும் வைக்கோல் ஓசைப் பட்டாலும் போலீஸாரின் பூட்ஸ் ஓசைதான் என்று அவர் நடுங்கி விட்டார். "இதென்ன க்ரகசாரம்! இப்படி எல்லாம் வந்து மாட்டிக்கொண்டு விட்டோமே, பிள்ளையாம் பிள்ளை! அவன் எனக்குப் பிள்ளையே யல்ல. அவன் மகா சத்ரு. என் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு; த்ரோகி" என்றெல்லாம் தான் பெற்ற மகனுக்கு லக்ஷார்ச்சனை செய்துகொண்டு, விதியே என வைக்கோலின் கீழ் அடைபட்டுக் கிடந்தார்.

பேச்சுக்குரல் கேட்டுக்கொண்டே இருக்கையில், திடீரென்று நின்றுவிட்டதால், வசுந்தராவுக்குப் பெரிய சந்தேகம் உண்டாகி விட்டது. மெல்ல தலையை உள்ளே நீட்டிப் பார்த்தாள். அங்கு யாரையுமே காணமையினல் ஆச்சரியமும் சந்தேகமும் உண்டாயின.

"நாம்தான் ஒருகால் ஏமாந்துவிட்டோமா!" என்று எண்ணியபடியே உள்ளே வந்தாள். அப்போது விமலா ஒய்யாரமாகப் படுத்து ஒரு நாவலைப் படித்துக்கொண்டு, தன் கவனம் முழுதும் அந்தப் புத்தகத்திலேயே ஆழ்ந்துவிட்டதுபோ லிருந்தாள். "என்ன விமலா! சௌக்கியமா?" என்று விசாரித்தபடியே வசுந்தரா அங்கு எதிரில் சென்ருள்.

விமலா :—ஓ! வஸுந்தராதேவியா! வாருங்கள், வாருங்கள். ஏது இவ்வளவு தூரம் இந்த ஏழையின்மீது கிருபை வைத்து இங்கு வந்தது? உட்காருங்கள்.

வஸுந் :—அடாடா! ஏது பெரிய பெரிய வார்த்தைகள் எல்லாம் சொல்கிருயே! வராமலும் போகாமலும் எனக்கென்ன கர்வமா வந்துவிட்டது. அதிருக்கட்டும். மாமா இங்கு வந்திருப்பதாயும், என்னை வந்து பார்க்கும்படியும் தகவல் தெரிவித்தார். ஆத்மநாதன்மீது குற்றங் கண்டு பிடிப்பதற்காக வந்திருப்பதாயும் இன்னும் ஏதேனும் எனக்குத் தெரிந்தால் அதையும் சொல்லும்படியும் எனக்கு எழுதியிருந்தார். அந்த அயோக்கியனைப்பற்றி முக்யமான விஷயத்தை உடனே தெரிவிக்கத்தான் நான் ஓடிவந்தேன். வெகு அவசரம்....அவர் கொல்லைப்புறம் போனரோ?" என்று வெகு தந்திரமாய்க் கேட்டாள்.

இதைக் கேட்ட விமலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் ஏதோ வேவு பார்க்க வந்ததாகத் தான் எண்ணியதற்கு நேர் மாருக அவள் பேசிய பேச்சில் விமலாவுக்குப் பெரிய ஆச்சரியம் உண்டாகிவிட்டது. 'தன்னை டாக்டர் விவாகம் செய்து கொள்ளாததால் அவன்மீது கோபங்கொண்டு ஒருகால் இம்மாதிரி மாறிவிட்டளோ ?" என்ற சந்தேகமும் உண்டாகியதால் சிறிது குழம்பினுள்.

வஸுந் :—என்ன விமலா ! பெரிய யோசனை செய்கிருயே ! நான் இப்போதுதானே மாமா இங்கு உலாவியவாறு பேசியதைப் பார்த்துக்கொண்டே வந்தேன். ஓஹோ ! ஒருகால் நான் சொல்கிற வார்த்தையில் நம்பிக்கையில்லாது யோசிக்கிருயா ? அப்படியொன்றும் சந்தேகப்படாதே. என் மனத்தை எப்போது அந்த மனிதன் நோகச் செய்தானே இனி, அவனிடம் எனக்கெதற்கு இரக்கம் ? இப்போது ஒரு முக்கியமான ஊழலைக் காட்டுவதற்கே நான் என் தாயார் செத்த துக்கத்தையும் பாராது ஓடிவந்தேன். எங்கே கூப்பிடேன்....பிறகு தருணம் தப்பிப்போய்விடும்" என்று கடுபுடி செய்தாள்.

வைக்கோல் போருக்குள் நெளியும் சிதம்பரநாதனுக்கோ பயம் ஒருபுறமும் வெட்கம் ஒருபுறமும் வாட்டுவதுபோதாமல், வைக்கோலுக்குள்ளே எங்கே தேளும் பாம்பும் இருந்து தன்னைப் பிடுங்கிவிடுமோ என்ற நடுக்கம் சொல்லத் திறமில்லை. எழுந்துபோய் விடலாமா என்று தவித்தபடியே, "ஓய், வைத்தி! போய்விடலாமா? இங்கு எனக்கு பயமாயிருக்கிறதே!" என்ருர்.

வைத்தியும் இதே பயத்தினுல் அவதிப்பட்டாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல், "ஓய் ! பேசாமலிரும். குரலைக் காட்டாதேயும். இந்த நிலைமையில் அவர்கள் வந்து பார்த்துவிடப் போகிருர்கள். பார்த்துவிட்டாலோ நம்ப கதி அதோகதிதான். உஸ்ஸ்ஸ் பேசாமலிரும்" என்று சர்ப்பம்போல் உஸ் கொட்டி உஷார் செய்தான்.

அந்த வைக்கோலுக்குள்ளே பாம்பு நெளிவதுபோலும், தேள் கொட்ட வருவதுபோலும் பயம் உண்டாகியதால், நரகவேதனை பட்டுக்கொண்டே யிருக்கையில், வஸுந்தராவின் குரல் கிட்ட

கேட்பதை யறிந்த சிதம்பரநாதனின் நிலைமை பின்னும் விவரிக்க வியலாத பரம சங்கடத்தில் வந்துவிட்டது. "ஓய்! குரல் மிகவும் அருகில் கேட்கிறதே, என்ன செய்வது?" என்ருர்.

"உஸ்ஸ்....பேசாமலிரும்" என்று பயத்துடன் கூறும் பொழுது "மாமா! மாமா! எங்கிருக்கிறீர்கள்? வெளியில் வாருங்கள். வஸுந்தராவுக்கு அந்த அல்பன் செய்த துரோகத்தினுல் அவளும் அதைப் பற்றித்தான் பேச வந்திருக்கிருளாம். வாருங்கள்" என்ருள் விமலா.

"அப்பாடா! பிழைத்தோம்" என்று கூறிக்கொண்டே, வைத்தி முதலில் வெளியில் வந்தான். "ஓய்! வெளியில் வாரும்" என்று கூறியபடியே வைக்கோலை விலக்கி, ஆளை வெளியில் கிளப்பினுன்.

18203

வஸுந்தராவுக்கோ, இந்தக் காட்சியைக் காண ஒருபுறம் சிரிப்பும், ஒருபுறம் அம் மனிதனின் சுப அறிவு இல்லாது மழுங்கி விட்டதற்காக வருத்தமும் ஒன்று கூடிப் பொங்கின. வைக்கோல் வேஷத்திலிருந்து வரும் அலங்கோலத்தைக் கண்டு தாங்கமுடியாத நகைப்பு வந்துவிட்டது. அவளை மீறி கடகடவென்று நகைத்து, "மாமா! பேஷ்! பேஷ்! இதென்ன திருக்கோலம்! தலை எல்லாம் வெக்கல்; தட்டிக்கொள்ளுங்கள்....அதோ! அதோ! முதுகெல்லாம் பாருங்கள்" என்று கூறிக்கொண்டே தானே தட்ட ஆரம்பித்தாள்.

வைக்கோலிலிருந்த தேள் ஒன்று துணியில் ஒட்டிக்கொண்டிருந்ததை அவர் பார்க்கவே இல்லை. அவமானமும் அசட்டுத்தனமும் முகத்தில் ஜ்வலிக்கிறது. பயித்தியக்காரக் களையுடன் வைக்கோலை உதறுகையில் தேளைப் பார்த்துவிட்டு, 'லபோ திபோ' என்று அடித்துக்கொண்டு குதித்தார். நல்ல வேளையாக வஸுந்தரா அதைக் கீழே தள்ளிக் கொன்றுவிட்டாள். "மாமா! அது கொட்டி யிருந்தால் எப்படித்தான் இருந்திருக்கும்?....உம்....பரவா யில்லை. கடவுள் காப்பாற்றிவிட்டார். இதேபோல் இனியும் ஒரு தேளின் வாயிலும் அகப்படாது காப்பாற்றினுல் போதும்" என்று தேளையும் வைத்தியையும் ஒரு திட்டத்தில் குறிப்பிட்டுச் சிலேடையாகப் பேசினுள்.

குற்றமுள்ள நெஞ்சுக்கு இது குறு குறு வென்று தைத்தது. வஸுந்தரா வெகு அவசரப்படுகிறவளைப்போல் நடித்து, "சரி, சரி. மாமா! வாருங்கள்! அவசரம். நான் வந்த காரியம் கெட்டு விடப் போகிறது. இன்று ஒரு சட்டைக்காரியுடன் உங்கள் அருமை மகன் டான்ஸ் ஆடப் போகிறானும். அதை உங்களுக்குக் காட்டுவதற்காக உங்களுக்குத் தந்தி அடித்து வரவழைக்க எண்ணி னேன். பிறகு நீங்கள் இங்கு வந்திருப்பதாகத் தகவல் கிடைத்த தும் ஓடிவந்தேன். வாருங்கள்" என்று காதோடு கூறி, அவனைக் கையைப் பிடித்து இழுத்தாள்.

கூட வைத்தியும் கிளம்புவான்போலிருந்தது. அவள் அதற்கு இடமே கொடுக்காமல் மாமாவை மட்டும் காரில் ஏற்றிக்கொண்டு வைத்தியை நோக்கி, "சார்! நீங்கள் இங்கேயே இருங்கள். நான் உடனே கார் அனுப்புகிறேன். இனமாக டிக்கட்டும் கிடைத்தால் அனுப்புகிறேன். விமலாவையும் அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று கூறியவாறு காரை வேகமாக ஓட்டிவிட்டாள்.

## 26

### மங்கையின் நடிப்பு—மனோவேகத் துடிப்பு

சிதம்பரநாதனுக்கு ஒன்றுமே புரியவில்லை. வஸுந்தரா சொல் வது உண்மையாகத்தான் இருக்குமென்ற நம்பிக்கை மட்டும் சிறிது இருந்தது. மகனைப்பற்றித் தாறுமாறாகத் திட்டி சபித்துக் கொண்டே வந்தார். வஸுந்தராவும் சாந்தத்துடன், "மாமா! சும்மா ஏன் இப்படி அவர்கள் மறைவில் திட்டவேண்டும். அவர் எதிரிலேயே திட்டுவதற்காகத்தானே உங்களை அழைத்துப் போகிறேன்....அடாடா! மாமா! இந்த ட்ரஸ் நன்றாக இல்லை. நீங்கள் காரிலேயே இருக்கிறீர்களா! நான் போய் 5 நிமிடத்தில் ட்ரஸ் பண்ணிக்கொண்டு வந்துவிடுகிறேன். இல்லாவிட்டால், நீங்களும் வருகிறீர்களா!" என்றாள்.

சிதம் :—சரி! லக்ஷ்மியின் படத்தையாவது ஒரு முறை கண்ணாப் பார்த்துவிட்டுப் பிறகு போகிறேன். நீ சீக்கிரம் வந்துவிடு—என்றதும், இருவரும் இறங்கி உள்ளே சென்ருர்கள்.

சிதப்பரநாதனுக்கு என்னவோ பிடித்துவிட்டதுபோலத்தான் இருந்தது. தான் வந்திருக்கும் ரகஸ்யம் தெரிந்துவிடப் போகிறதே என்ற திகில் ஒருபுறம் பாதித்தவாறு, தன் சகோதரியின் பெரிய படத்தின் கீழ் நின்று அவளேயே உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தார்.

உள்ளே சென்ற வஸுந்தரா டெலிபோனைத் திருப்பினுள். "ஹல்லோ! மாமீ! மாமீ!—ஹா....வஸுந்தரா!....ஆமாம் மாமீ!....

மாமி :—என்னமாவது தகவல் கிடைத்ததா! ஏதாவது நல்ல சமாசாரம் உண்டா!

வஸுந் :—பேஷா உண்டு. எப்படியோ நாடகமாடி மாமாவை இப்போ நான் எங்காத்திற்கு அழைத்து வந்துட்டேன்.

மாமி :—ஆ....அப்படியா! இப்போ உங்க வீட்டிலா இருக்கிருர்? அப்படியானுல் நான் வரட்டுமா!

வஸுந் :—மாமி! இப்போ நேரில் வராதே; காரியம் கெட்டுவிடும். உனக்கு யோசனை சொல்வதற்காகத்தான் உன்னை அழைத்தேன். நீ தற்கொலை செய்துகொள்வதாக, மனம் உருகக் கடிதம் எனக்கு எழுதி உடனே அதை ஆளிடம் இங்கு அனுப்பு. அதைக் காட்டி, நான் மாமாவை அங்கு அழைத்து வருகிறேன். உடனே எழுது....தாமதிக்காதே—என்று கூறிவிட்டாள்.

"வஸுந்தரா! வஸுந்தரா!" என்று மாமா இதற்குள் இரண்டு முறை கூவி விட்டார். "இதோ வந்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டே உள்ளேயே இருந்தாள். நேரத்தைக் கடத்துவதற்காக ஒரு புடவையைக் கட்டிக்கொண்டு வெளியில் வந்தாள். மீண்டும் எதையோ நினைத்தவள்போல், "ஏன் மாமா! இது ரொம்ப காடியா இருக்கா?....சரி! ஸிம்பிலா ஒரு ஸில்குப் புடவை கட்டிக்கொண்டு வருகிறேன்" என்று கூறி, மீண்டும் உள்ளே ஓடிப்போய் விட்டாள்.

பின்னும் அரை மணியாகியது. மாமியின் கடிதம் வரவில்லையே என்று எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தாள். ஸைகிளில் ஆள் வந்து கடிதத்தை ஜன்னல் வழியாகவே கொடுத்துவிட்டுச் சென்றான். அதை ஒரு முறை படித்து தனக்குள் சந்தோஷப் பட்டாள். உடனே நாடகம் நடிக்கப் புகுந்து, "ஹா....ஐயோ! மாமீ! மாமீ!" என்று ஒரு பெரிய சத்தம் போட்டவாறு கட்டிலில் தடாலென்று விழுந்தாள்.

அவ் வறையின் வெளியிலேயே நிற்கும் சிதம்பரநாதனுக்கு இது காதில் கேட்டதும் திடுக்கிட்டவராய் ஓடி வந்தார். வஸுந்தரா கட்டிலின்மீது அலங்கோலமாகக் கிடக்கிறாள். கண்ணீர் பெருகுகிறது. அவள் கையில் ஒரு கடிதமிருந்ததைக் கண்டு சிதம்பரநாதன் பயந்துபோய், "குழந்தாய், வஸுந்தரா! என்னம்மா! என்ன சமாசாரம்!" என்று கவலையுடன் கேட்டார்.

வஸுந்தரா அப்போதும் முகத்தைத் துணியால் மூடிக்கொண்டே தேம்பி யழுதவாறு, "மாமா! இதோ இதைப் பாருங்களேன். உங்கள் குடும்பம் இப்படியா அதோகதி யாகவேண்டும்?" என்று புலம்பினாள்.

சிதம்பரநாதன் விவரம் புரியாமல் குழம்பியபடியே கடிதத்தைப் படிக்க எடுத்தார். அதைப் பார்க்கும்போதே அது தன் மனைவியின் கையெழுத்து என்பது நன்றாகத் தெரிந்ததும், அவருடைய குழப்பம் அதிகரித்து விட்டது. பரபரப்புடன் அதைப் படிக்க வாரம்பித்தார்.

"என்னருமைக் குழந்தை வஸுந்தராவுக்கு, சர்வ மங்களமும் உண்டாவதாக.

குழந்தாய்! மனித வாழ்க்கையில் இரவும் பகலும் போலவே இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும் என்று பெரியோர்கள் கூறியிருப்பதும் மகாபாவியாகிய என் விஷயத்தில் பொய்த்துவிட்டது. என் குடும்பத்தின் துன்பம் விடியும் வழியே காணவில்லை. கதறிக் கதறி என் கண்களும் மங்க வாரம்பித்து விட்டன.

அருமையாய் உள்ள ஒரே கண்மணியாகிய ஆத்ம நாதனின் புகழ் தினைதினை வளர்ந்து வானை யளாவும் நிலைமையைக் கண்ட பொறாமைக் கூட்டத்தினரின் கண் வீச்சும், அவர்களின் குடிகெடுக்கும் மாய சூழ்ச்சியும் பெத்த பிதாவாகிய உன் மாமாவுக்குச் சிறிதும் தெரியாது, அவர்களின் வலையிலேயே அவர் பரிபூர்ணமாய் விழுந்து விட்டதாகத் தெரிகிறது.

அவர் மனத்தைக் கலைத்து, துர் எண்ணத்துடன் அவரை எந்தப் பாவியோ இவ்வூருக்கு அழைத்து வந்திருக்கிறானாம். அவரும் தன் சுய மரியாதை, மதிப்பு இரண்டையும் துறந்து இவ்வூருக்கு வந்து, தான் பெத்த மகனுக்குச் சிக்ஷை விதிக்கப்போவதாய் வைராக்யம் செய்து கொண்டிருக்கிறாராம்.

குழந்தாய்! அந்தப் பயங்கரத்தை நினைக்கவே வயிறு பகீரென்கிறது. பொருளைக் கடன் கொடுத்தாலோ, இழந்து விட்டாலோ திரும்பவும் பெறலாம். தன் சொந்த அறிவை, கண்ணியத்தை இழந்து விட்டாலோ, பிறருக்குத் தத்தம் செய்துவிட்டாலோ எப்படி அதை மீண்டும் அடைய முடியும்! இந்தக் கோர சங்கடங்களைக் கண்டு என்னால் சகிக்கவே முடியவில்லை.

உன் மாமாவுக்குப் போட்ட கடிதங்கள் அத்தனையும் சமுத்திரத்தில் கரைத்த சர்க்கரையைப் போலாகிவிட்டன. அவர் வந்துள்ள வேகத்தில் என் கண்மணிக்கு என்ன கொடுமையான தண்டனைதான் விதிப்பாரோ அல்லது அவரை இந்த மட்டும் கலைத்து இழுத்துக் கொண்டுவந்த பாவிகள் என் ஆத்மநாதனைக் கொன்று தான் போட்டுவிடுவார்களோ! யார் கண்டது? அந்த அருமைக் கண்மணியை இழந்தும் நான் உயிர்வாழ வேண்டுமா? வேண்டாம். வேண்டாம்.

இந்தக் கஷ்டங்களை என்னால் சகிக்கமுடியாது. இது பரியந்தம் நான் பட்ட கஷ்டங்கள் போதும். இனியும்

என்னால் பொறுக்கமுடியாததாகையால் நான் தற்கொலை புரிந்துகொண்டு இறக்கத் துணிந்துவிட்டேன். இதை உனக்கேன் எழுதவேண்டும். பேசாமல் சாகிறதுதானே என்று நினைக்கலாம்.

உன் மாமாவுக்கு, தன் ஒரு குழந்தை என்கிற வாத்ஸல்யமில்லாது வரண்டு போன பாலைவனம்போன்ற இதயத்தில், அவன் மீதிருக்கும் ஆத்திரத்தினால் பெத்த தாயாரையும்—அவன் டாக்டராகையினால் — அவனே கொன்றுவிட்டான் என்றுதான் தோன்றும். வீணாக குழந்தைக்கு அத்தகைய கொலைப்பாதகப் பழியொன்று வாராதிருப்பதற்காகவே நான் இதை உனக்கு எழுதுகிறேன். நீ இதைப் பார்த்து வருவதற்குள் என் ஆவி நீங்கி இருக்கும். உன் மாமாவைப் பார்த்தால், பிறகாவது அவரிடம் உண்மையைத் தெரிவி. இவ்வளவுதான் விஷயம். உடனே எனக்கு டெலிபோன் செய்து நீ எங்கே தடுத்துவிடுவாயோ என்று எண்ணி, டெலிபோன் ரிஸீவரைத் தனியாகவே வைத்துவிட்டேன். அதுவும் பலிக்காது.

இங்ஙனம்,
அபாக்யவதியான மாமி,
மீனலோசனி."

அதைப் படித்த உடனே சிதம்பரநாதனுக்கு ஆகாயமும், பூமியும் ஒன்றாகச் சேர்ந்து சுற்றுவதுபோலாகிவிட்டது. "ஐயையோ! விஷயம் மிஞ்சிவிட்டதே! தலைக்கேறிவிட்டதே!....என் முட்டாள் தனத்தினால் என் குடும்பமே சிதறிவிட்டதே! ஐயோ! வஸுந்தரா! எழுந்திரு. எழுந்திரு. உடனே போய் இதைத் தடுக்கவேண்டும். நான் முழு மூடனாகிவிட்டேன். மீனலோசனியைத் தடுத்துக் காப்பாற்றவேண்டும்....உம்....புறப்படு" என்று அவளை எழுப்பினர்.

தான் நடித்த நாடகம் சரியான பலனையே கொடுத்ததற்காக வஸுந்தரா மனத்திற்குள் சந்தோஷப்பட்டவளாய், மேலுக்கு விம்மி விம்மி யழுதபடியே எழுந்தாள்.

"ஐயோ! மாமா! மாமியும் போய்விட்டால் பிறகு என்ன இருக்கிறது? இந்நேரம் என்ன நிலைமையில் இருக்கிருளோ தெரியவில்லையே! இதுவரையில் நான் எத்தனையோ தரம் மாமியைத் தேற்றித் தைரியங்கூறி இருப்பதெல்லாம் வீணுய்ப் போய்விட்டதே. உம். உங்கள் அதிர்ஷ்டம் எப்படியோ! உங்களுடைய பராமுகத்தினுல்தான் தற்கொலை நிகழ்ந்தது என்று ஊரார் சொல்வார்களே! இனி, என்ன செய்வது?" என்று கூட அனுதாபப்படுவதுபோல் கண்ணீர் பெருகக் கூறியபடி, காரைத் தானே ஓட்டவாரம்பித்தாள்.

சிதம்பரநாதனுக்குச் செய்யும் மனோவேதனையோ கூறத் திறமில்லை. கார் ஆகாய விமானமாக மாறி, ஒரு விநாடியில் பறந்து போய்விடக் கூடாதா என்றும், தன்னுடைய மனைவியைத் தற்கொலையினின்றும் காப்பாற்றும்படி பகவானை வேண்டியும் பித்தன் போல் உட்கார்ந்திருக்கிருர். "சீக்கிரம் போயேன். வஸந்தா!...." என்று விநாடிக்கு விநாடி சொல்கிருர்.

"என்ன மாமா! ஸ்பீடாமீட்டரைப் பாருங்கள். எத்தனை மைல் வேகத்தில் போகிறது. இன்னும் வேகமாக எப்படி மாமா போவது?" என்று வீணுக்காவது அவருடைய ஆவலைக் கிளப்புவதற்காக வேறு எங்கெங்கேயோ சுற்றி ஓட்டுகிருள். நமட்டுச் சிரிப்பு சிரிக்கிருள்.

சிதம் :—என்னம்மா! குழந்தாய்! நம்ப வீடு இவ்வளவு தூரமா இருக்கிறது? இன்னும் எங்கெங்கேயோ போகிருயே?

வஸந்:—இல்லே மாமா! வீடு என்னவோ எப்போதும் இருக்கும் தூரத்தில்தானிருக்கிறது. உங்களுக்கு இப்போது அதிக நேரமாவதுபோல் தோன்றுகிறது.—என்று கூறிக்கொண்டே காரை வேகமாய் ஓட்டுகிருள்.

சிதம் :—உன் மாமியை உயிரோடு காண்போமா?

வஸந் :—என் மாமா! ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தீர்களா! அவரைப் பார்த்தீர்களா? ஏதேனும்....

சிதம் :—ஐயோ! இப்போது அதெல்லாம் கிளறுதே. என் மடத்தனத்தினுல் ஏதேதோ நடந்துவிட்டது. முதலில் இப்போது உன் மாமியை உயிருடன் கண்டால், பிறகு மற்றது பேசலாம்....

வஸந்:—ஐயையோ! காரில் பெட்ரோல் ஆய்விட்டது போலிருக்கிறதே. என்ன செய்வது?....என்று கூறிக்கொண்டே காரை நிறுத்தினுள்.

சிதம்பரநாதனுக்குக் கதி கலங்கிவிட்டது. "இதென்ன கஷ்ட காலம் வஸந்தரா! இப்போது பெட்ரோலுக்கு எங்கே போவது? இனி உபயோகமில்லே. உன் மாமியின் சவத்தைத்தான் பார்க்க நேரும்போலிருக்கிறது. வஸந்தரா! இப்போது என்ன செய்வது?"....என்று துடிக்கிறுர்.

இவருடைய மனே நிலைமை மிகவும் உச்சஸ்தாயியை எட்டிவிட்டது என்றதை யறிந்ததும் வஸந்தரா இனி தாமதிக்கக்கூடாதென எண்ணியவளாய், "சரி, மாமா! ரிஸர்வ் டாங்கில் ஒருகால் பெட்ரோல் இருக்கிறதா என்று பார்க்கிறேன். அதில் இருந்தால் அதுவே ஒரு நல்ல சகுனம். மாமிக்கு ஒன்றும் ஆபத்து இருக்காது. இல்லையேல் சந்தேகந்தான்" என்று கூறிக்கொண்டே எதையோ திறந்து பார்த்தாள்.

சந்தோஷத்தால் குதிப்பவள் போல், "மாமா! மாமா! இதில் பெட்ரோல் நிறைய இருக்கிறது. இதுவே நல்ல சகுனம்" என்று கூறிக்கொண்டே காரை வெகு வேகமாக ஓட்டவாரம்பித்தாள். காருக்குமுன் பறந்து செல்கிற மனவேகத்துடன் சிதம்பரநாதன் எண்ணிலாத எண்ணங்களாகிய அலேயில் குழம்பிக் கிடந்தார்.

"நம் விட்டு வாசலில் கூட்டமாக விருக்குமோ, டாக்டர்களும் போலீஸார்களும் வந்திருப்பார்களோ? ஒருவேளே மீனு செத்துப் போய்விட்டாள் என்ற சொல் காதில் விழுந்துவிடுமோ! பொது மக்கள், 'இந்த மகாபாவியால்தான் இப்படியாகி விட்டது" என்று என்னேத் திட்டுவார்களோ?'....என்றெல்லாம் நினைக்கும்போது அந்தந்த காட்சிகள் அப்படியே அவர் கண்முன்பு தெரிவதுபோல் உருவெளித் தோற்றங்கள் தோன்றின.

இதற்குள் காரும் விட்டு வாசலில் வந்தது. ஏற்கெனவே வாசலில் ஒரு கார் நிற்பதைக் கண்டதும் சிதம்பரநாதனுக்குப் பயமும் அச்சமும் உண்டாகிவிட்டன. மெல்லிய குரலில் "வஸந்தரா! இது யாருடைய கார் உனக்குத் தெரியுமா?" என்றுர்.

அவள் நமட்டுச் சிரிப்பு சிரித்தபடியே, முகத்தை அவர் பக்கம் திருப்பாமல், இதைப் பார்த்தால் போலீஸாரின் கார் மாதிரி இருக்கு மாமா !....

சிதம் :—என்ன ! என்ன !! போலீஸாரின் காரா ?

வஸந்:—இல்லே; இல்லே. தவறிச் சொல்லிவிட்டேன். யாரோ பெரிய டாக்டரின் கார்போலிருக்கிறது. எதற்கும் தைரியமாய் இறங்கி உள்ளே வாருங்கள். நீங்கள் வாயையே திறக்கக்கூடாது. நானே பேசி, பதில் சொல்லிவிடுகிறேன். வாருங்கள்—என்று உள்ளே அழைத்துச் சென்றாள். சிதம்பரநாதரும் வாயைத் திறக்காமல் அவள் பின்னாலேயே பெட்டிப் பாம்பைப்போல் நடந்தார். இம் மங்கையின் நடிப்பில் அவருடைய மனோவேகத் துடிப்பைக் கூறமுடியுமா ?

## 27

### தனயனின் கலக்க இதயம்—தந்தையின் ஞான உதயம்

தன் நிறை யழிந்து படுத்துக்கிடக்கும் ஆத்மநாதன் எல்லோரும் வியக்கும்படியாய் ராகம் இழுப்பதைப் பார்த்ததும் அங்குள்ளோர் அத்தனை பேரும் வியப்புக் கடலில் மூழ்கினார்கள். யாழிசையுடன் கூட வாய்ப்பாட்டு பாடவாரம்பித்ததும், ஆத்மநாதன் முகத்தில் பின்னும் ஆனந்தக் களை தாண்டவமாடத் தொடங்கியது.

அதே ச்லோகத்தை, அவன் வாயும் கூறியது. பின்னும் சில நிமிடங்களுக்கெல்லாம் இப்படியும் அப்படியும் புரண்டான். மெல்ல கண்ணைத் திறந்தான். அங்கு ஏகப்பட்ட பேர்கள் உட்கார்ந்திருப்பது கண்டு, ஒன்றுமே தோன்றாது விழித்தான்.

அதே சமயம் பெரிய டாக்டர், "என்ன ! ஆத்மநாதா ! எப்படியிருக்கு!"....என்றார். அதே கேள்வியை மற்றும் பலரும் ஏககாலத்தில் கேட்டார்கள். கந்தன் கண்ணீர் பெருக தன் சொந்தத்தையும்

அன்பையுங் காட்டி, "ராசா! சின்னராசா! எப்படி இருக்குங்க? இன்னு நடந்துச்சுங்க?" என்று தடவிக்கொடுத்தவாறு கேட்டான்.

ஆத்மநாதனின் தேகம் நெருப்பாய்ச் சுடுவதைக் கண்டு பயந்து, "சாமீ! ஜொரம் காயுதுங்களே!" என்று அலறியதுபோல் கூறினன். ஆத்மநாதனுக்கு, சில விஞடிகள் சென்ற பிறகுதான் தன் பிதா கூறியதும், தான் வராண்டாவில் நின்றதும் ஞாபகத்திற்கு வந்தது. அவன் மகா புத்திசாலியாகையால் இங்குள்ள விஷயங்களை ஒரு நொடியில் ஊகித்தறிந்து கொண்டான்.

ஆனல், எழுந்திருக்கமுடியாத பலஹீனத்துடன் எழுந்து எல்லா டாக்டர்களுக்கும் வந்தனம் அளித்தான். பெரிய டாக்டர் அவனை எழுந்திருக்காமல் தடுத்து, "சார்! தயவுசெய்து பரிபூரண ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். திடீரென்று இம்மாதிரி மயக்கம் வந்ததைப் பார்த்துப் பயந்துவிட்டோம். இனியும் ஜாக்ரதையாயிருக்க வேண்டும். ஜுரம் வந்திருக்கிறது" என்று கூறி, ஏதோ ஒரு மருந்தைத் தன் கையினலேயே கொடுத்து, பின்பு "சார்! உங்களுடைய அபூர்வமான ஆராய்ச்சி எங்களைப் பிரமிக்கச் செய்கிறது. நான் இதை இதுவரையில் நம்பவே இல்லை. இன்றுதான் நேரில் பார்த்தேன். ரொம்ப ஆச்சரியமாயிருக்கிறது" என்றார்.

இதற்குள் பொறாமையும், வாய்த்துடுக்கும், வயிற்றெரிச்சலும் கொண்ட ஆரோக்யசாமிக்கு, பெரிய டாக்டரே இதைப் புகழ்ந்து பேசிவிட்டதில் பின்னும் பன்மடங்கு அதிகரித்த கொள்ளித்தனம் வந்துவிட்டது. அந்த ஆத்திர வேகத்தில் "உம். ஏதேது. பெரிய டாக்டர் கூட இந்தச் செப்பிடு வித்தைக்கு மயங்கிவிட்டாரே! உண்மை தெரிந்தால் அப்படிப் புகழமாட்டார். இதெல்லாம் வெறும் நாடகம். ஆத்மநாதனுக்கு மயக்கமுமில்லை; மண்ணுங் கட்டியுமில்லை. 'நான் அடிக்காப்லே அடிக்கிறேன். நீ அழுறாப்லே அழு' என்று ஓர் கணவன் மனைவிக்குச் சொல்லும் பழமொழிபோன்று "மயக்கம்போலப் படுக்கிறேன்; ஆராய்ச்சியினல் தெளிவதுபோல் தெளிகிறேன்! என்று முன்கூட்டி யோசனையுடன் செய்த வேலையல்லவா இது!" என்று இவர்கள் காதில் படவேண்டுமென்ற நோக்கத்துடன் கமலாவிடம் கூறினன்.

இவ்வார்த்தை எல்லோர் காதிலும் கேட்டது. சிலர் சிரித்தார்கள். சிலர் விரைக்கப் பார்த்தார்கள். ஆனால் பேசவில்லை. ஆத்மநாதன் மட்டும் தன் இயற்கையாயுள்ள சாந்தத்துடன், "ஆரோக்ய சாமீ! இப்படி வா! இவ்வளவு தூரம் நீ இங்கு வந்ததற்கும், என் வேஷத்தைக் கண்டு பிடித்துச் சொல்லியதற்கும் பலகோடி வந்தனங்கள் செய்கிறேன். இச் சமயம் உனக்கு ஒரே ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அதாவது, சத்தியமும், உண்மையும், சாகா வரம் பெற்றவை. இறைவனின் இணையிலாத கடாக்ஷம் பெற்றவை. அவற்றை யாராலும் அழிக்கவோ, கொல்லவோ முடியவே முடியாது. இறைவனே அழித்தாலும் அழிவது கஷ்டம். உலகில், இதன் உண்மையை இன்றல்ல; என்றாவது மக்கள் அறிந்தே தீருவார்கள். இதை மட்டும் மறக்காதே" என்று கூறினான்.

ஆரோ:—(ஆத்திரமும், அலக்ஷியமும் கலந்த தொனியில்) அடாடா! மகாபண்டித ஞானவைராக்கிய பூஷண பாகவதோத்தம சிகாமணியே! தங்களுடைய உபதேசத்தைப் பெறுவதற்கு அடியேன் இங்கு வரவில்லை. தங்களுடைய கபடநாடக லீலைகளை உடைக்கவே வந்தேன். எல்லாம், தானே தெரிகிறது. இதற்குத் தற்பெருமை வேறு வேண்டுமா?—என்று கூறிக்கொண்டே போய் விட்டான்.

ஆத்மநாதனும் அலக்ஷியமாகச் சிரித்தான். மற்ற டாக்டர்கள் விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள். எல்லோரும் போனதற்குப் பிறகு, ஆத்மநாதன் ஆயாசத்துடன் படுத்தபடியே, "கந்தா! என்ன சமாசாரம்? நீ எப்போ வந்தே? அப்பா எப்போ வந்தார்?" என்று கேட்டான்.

அன்பு ததும்பும் குரலில் கந்தன், நடந்த சகல விஷயத்தையும் ஒன்றுவிடாது கூறிவிட்டான். இதைக் கேட்டதும் ஆத்மநாதனுக்குத் தெட்டென எல்லாம் விளங்கிவிட்டன. விமலாவுக்குப் பந்துவாகிய அந்தப் பாவி வைத்தியரால்தான் இத்தனையும் நடந்திருக்கிறது. இத்தனைக்கும் காரணம் இந்த இரண்டு வேர்ப்புழுக்கள் தான். இருக்கட்டும். பகவான் இருக்கிறார்—என்று தனக்குள் பெருமூச் செறிந்து, "ஐயா இங்கு வந்து சென்றது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

கந்த:—நான் வண்டி எறங்கச்சிலே, ஐயாவும் அந்தப் பாழாப் போனவனும் கார்லே போவச்சே பாத்தேனுங்க. இங்கே ஐயா வந்து திட்டிருைங்களா? என்று நடந்துடுமோன்னுதான் அம்மா அனுப்பினுங்க.

ஆத்ம:—(நடந்ததைச் சொல்லி) அவர் அப்படி பேசிவிட்டுப் போனதால்தான் இப்படி என் மூளையே குழம்பிவிட்டது. அது கிடக்கட்டும். அம்மாவுக்கு, என் உடம்பு விஷயம் ஒன்றும் தெரியாதே!

கந்த:—தெரியாதுங்க. தெரிஞ்சா அம்மா உசிரே பூடுங்க. இனுமே சொல்லட்டுமா?

ஆத்ம:—ஊஹூம். வேண்டாம். சாயந்திரத்திற்குள் நன்றாக தெளிந்துவிடும்; நானே நேரில் வந்து சொல்கிறேன். நீ பேசாமலிரு.

கந்த:—ஆனு நான் ஊட்டுக்குப் போகட்டுங்களா!

ஆத்ம:—போகலாம் இரு. என்ன அவசரம்? நான் இன்னும் கொஞ்சம் பொறுத்து அம்மாவுக்கு டெலிபோன் செய்து விடுகிறேன். நீ கவலைப்படாதே!— என்று தேற்றி உட்காரவைத்தான். ஜுரம் அதிகமாகிக்கொண்டே வருவதால், போர்த்துக்கொண்டு படுத்துவிட்டான்.

கந்தனுக்கோ எழுந்து போகவும் மனமில்லை. 'அம்மாள் என்ன தவிக்கிறார்களோ' என்றும் தோன்றுகிறது. ஆத்மநாதனின்கால்களை வருடியவாறு உட்கார்ந்திருந்தான். சின்ன டாக்டர்கள் வந்து மருந்து கொடுத்துவிட்டுச் செல்கிறார்கள்.

ஆத்மநாதனின் மனத்தில் போராடும் விஷயங்களில் அவன் பிதா சொல்லிச்சென்ற வார்த்தைகள் ஒன்று, ஆரோக்கியசாமியின் திமிர் பிடித்த வார்த்தைகள் ஒன்று, சுமதியைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் ஒன்று, இவைகளுடன் அவன் மல்யுத்தம் செய்துகொண்டே படுத்திருக்கிறான்.

*** *** *** *** ***

வஸந்தாவின் பின்னால் வரும் சிதம்பரநாதனின் இதயம் திக்கு, திக்கு என்று அடித்துக் கொள்கிறது. உள் பக்கம் ஹாலை நோக்கிச் செல்கையில், யாரோ பேசும் குரல் கேட்டது கண்டு வஸந்தா, "மாமா! மாமி சாகவில்லை. பிழைத்துத்தான் யாரு

டனே பேசுகிருப் போலிருக்கு. ஒரு வேளை மாமி செத்துப் போய், அவளுடைய ஆவிதான் பிசாசாகப் பேசுகிறதோ என்னவோ? அதையும் பார்த்துவிடலாம். தடதடவென்று போகாதீர்கள்" என்று ஒரு குண்டு எறிந்ததுபோல் சொல்லிவிட்டாள்.

இதைக் கேட்டதும் சிதம்பரநாதனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. பேந்தப் பேந்த விழித்துக்கொண்டே நின்ருர். உள்ளிருந்து வரும் சம்பாஷணைகளைக் கவனிக்கலானர்.

ஜெமீந்தாரிணி :—அம்மா! நீங்கள் தன்னடக்கம் என்பதில் கட்டுப்பட்டுப் பேசுகிறீர்கள். என்ன இருப்பினும் உங்கள் மகனைப் போன்ற உத்தமர்கள் உலகத்தில் கிடைப்பதே துர்லபம்.

மீன:—அப்படி என்ன பிரமாதமாய் அவன் செய்துவிட்டான். தன் தொழிலின் கடமையைத்தானே அவன் செய்தான்.

ஜெமீன் :—அம்மணீ! உலகத்தில் தொழில் முறைப்படி எல்லோருமே செய்கிருர்களா? எத்தனையோ டாக்டர்கள் இறுமாப்புடன் பேஷண்டைச் சரியாய்க்கவனிக்காமலும், இராக்காலங்களில் ஆபத்தென்று அழைத்தால் வாராமலும் இருக்கிருர்கள் தெரியுமா! அங்ஙனமிருக்க உங்கள் மகன் எங்களிடம் கருணை வைத்து, வெளியூருக்குச் சென்று, சாகக் கிடக்கும் தருணத்திலிருந்த என் மகளைத் தானே முதல் வகுப்பு வண்டியில் வைத்து அழைத்துவந்து என்னிடம் சேர்த்து, இந்த வேளைக்கு என் வயிற்றில் பாலை வார்த்தார். இதற்காக நான் என்னதான் கைம்மாறு செய்தாலும் தீராது. இந்தப் பகுமானம் ஒரு பெரிதா?—

என்று பேசுவதைக் கேட்டதும் சிதம்பரநாதனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. உள்ளே பேசுவது ஜெமீந்தாரிணியம்மாளின் குரலென்றும், அன்று ஆத்மநாதன் அழைத்து வந்தது இந்த அம்மாளின் மகளாகிய நோயாளிதான் என்றும் வியக்தமாய்த் தெரிந்ததும், தான் அந்த மனிதனல் முற்றிலும் ஏமாற்றப்பட்டு விட்ட அவமானம் முகத்தில் தாண்டவமாடியது.

அதற்கு மேலும் அவர்கள் உள்ளே பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த சிதம்பரநாதனின் மனத்தில் மகனைப் பற்றிக் கப்பிக்கொண்டிருந்த அந்தகாரம் நீங்கத் தொடங்கியது. அவர்

திடீரென்று தடதடவென்று வஸந்தாராவையும் மீறிக்கொண்டு, உள்ளே போய், "மீனா!" என்று கூப்பிட்டார்.

மீனலோசனியின் ஆனந்தத்திற்குக் கேட்கவேண்டுமா? வஸந்தாரா சரியான சாகஸக்காரி என்பது அப்போதுதான் விளங்கியது. வஸந்தாராவும் மீனாவும் தமக்குள் கள்ளச் சிரிப்பு சிரித்துக் கொண்டதைச் சிதம்பரம் பார்க்கவில்லை.

மீனா, வழக்கப்படி கணவனுக்கு நமஸ்காரஞ் செய்துவிட்டு நின்றாள். ஜமீந்தாரிணியும், "சரி! வருகிறேன்" என்று கூறிவிட்டு, மெல்ல நழுவிவிட்டாள். அந்தம்மாள் கொண்டுவந்த வரிசைகள் ஓர் கல்யாண வீட்டு வரிசைகள்போல் இருந்தன.

மீனா:—வந்துவிட்டாயா! இந்த ஜமீந்தாரிணியம்மாள் ஒருத்தி எனக்குக் குறுக்கே வந்தாள். இப்போது நீயே வந்து விட்டாய். இப் பாழும் ஜென்மத்திற்குச் சாவுகூட நெருங்க மாட்டேனென்கிறது.—என்று கூறி முடிப்பதற்குள், சிதம்பரம் அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு, 'மீனா! மீனா! இனிமேல் இம்மாதிரி பேசாதே! கடவுள் அருளினால்தான் நீ என் முன்பு இம்மாதிரி காட்சி கொடுக்கிறாய். என் முட்டாள்தனத்தை மறந்துவிடு. நீ கடிதத்தில் எழுதியது போல் புத்தியையும், கண்ணியத்தையும் பிறருக்கு அடிமையாக்கிய மதியீனத்தை இப்போதே உணர்ந்தேன். இனிமேல் நான் என் மதியை இழக்கமாட்டேன். நீ உன் சபதத்தை நிறுத்தி விட்டேன் என்று எனக்குச் சத்தியம் செய்து கொடுத்தால்தான் நான் சாப்பிடுவேன்....'என்று சிறு குழந்தையைப்போல் கண்ணீர் பெருகக் கேட்டார்.

மீனாவுக்கும் வஸந்தாராவுக்கும் சிரிப்பு வயிற்றைப் பிடித்துக் கொண்டுபோகிறது. ஒருவாறு அதை யடக்கிக்கொண்டு வஸந்தாரா, "என்ன மாமீ! மாமாவின் மனத்தைத் தவிக்கவிடாதே. ஏதோ தெரியாத்தனமாக அவர் கோபித்துக் கொண்டால், அதற்கு நீ இப்படியா தற்கொலை செய்துகொள்வதாக பயமுறுத்துவது? மாமாவின் இஷ்டப்படி, 'இனி தற்கொலை புரிந்துகொள்வதில்லை' என்று சொல்லு மாமி!" என்றாள்.

மீனு:—ஆமாம். இன்று இம்மாதிரி சொல்லுவார். நாளை வேறு யாரேனும் கலகம் செய்தால் அந்தப் பக்கம் மாறிவிடுவார். தான் பெற்ற மகன்மீது தானே சந்தேகித்தும், வெறுத்தும் பிறர் பரிகஸிக்க ஏளனமாய் அலக்ஷியம் செய்வதும், அவன் மனத்தை நோகச் செய்வதும் என்ன வெட்கக் கேடு. இவரைத் தூண்டிவிட்ட கலகக் காரர்கள், ஊரைவிட்டு இவரை ஓட்டிவிட்டு, வீட்டை அப்படியே சூறைக்கொள்ளை யடித்து விட்டார்களாம். இது இவருக்கு என்ன தெரியும்? இந்த மாதிரி சங்கடத்தை எத்தனை நாளைக்குத் தான் நான் அனுபவிப்பேன்? சாகாமல் என்ன செய்வது?

சிதம்:—என்ன! என்ன! ஊரில் சூறைக்கொள்ளையா? யார் சொன்னது? இதென்ன பேரிடி!

மீனு:—பேரிடி போன்ற காரியத்தை நீங்கள் செய்தால், அதன் விளைவு பேரிடிதானே இடிக்கும். எத்தனையோ வருடக்கணக் காக இருந்த கந்தனை அந்த அல்பங்கள் முன்பு அடித்து விரட்டி விட்டதன் பலன், அவனை அவர்கள் முதுகு எலும்பு நொருங்க அடித்துவிட்டு வீட்டையும் கொள்ளையிட்டுவிட்டார்களாம். நீங்கள் தான் நன்றிகெட்டு வேலைசெய்தாலும் அவன் நன்றியுடன் ஓடி வந்து, சகல விஷயத்தையும் என்னிடம் கூறிக் கதறினன். அதனால் தான் நான் தற்கொலைக்குத் துணிந்தேன்.

சிதம்:—ஐயையோ! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே! மீனு! கந்தன் இப்போது எங்கே?

அவன் பையனைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறன். —என்று மீனு சொல்லும்போது தினசரிப் பத்திரிகை வந்துவிட்டது. வஸுந்தரா அவளுடன், "இதென்ன! இன்று 5 மணிக்குள் ளேயே பத்திரிகை வந்துவிட்டதே—!" என்று கூறிக்கொண்டே அதை எடுத்துப் பிரித்துப் பார்த்துக்கொண்டே வந்தாள்.

முன்பு, சுமதியின் கண்ணில் பட்ட அதே சமாசாரத்தைப் படித்ததும், 'ஹா' வென்று வஸுந்தரா அலறிவிட்டாள். என்ன வென்று இருவரும் துடித்தவாறு பத்திரிகையைப் பார்த்ததும் "ஐயோ! மோசம் வந்துவிட்டதே!" என்று மீனுலோசனியம் மாள் துவண்டு விழுந்துவிட்டாள். "நீங்கள் ஆஸ்பத்திரிக்குப்

போனீர்களா! என்னதான் நடந்தது? ஏதோ விசேஷமிருப்பதால் தான் அவனுக்கு இந்த விபத்து வந்திருக்கிறது. அப்போ போன கந்தன் இன்னும் காணவில்லையே! என்னவோ! ஏதோ என்று நான் பயந்துகொண்டிருந்ததற்குச் சரியாகிவிட்டதே!....வஸுந்தரா! உடனே ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டு போயேன்" என்று கண்ணீருடன் மீனு கதறினாள்.

சிதம்பரத்திற்கும் மனம் குழம்பித் தவிக்கிறது. தான் சொல்லி வந்த வார்த்தைகளின் அதிர்ச்சியினால்தான் ஏதோ வந்துவிட்டது என்று அவன் இதயத்தில் குத்திக் காட்டுகிறது. ஐயோ! கண் மூடித்தனமாய் தன்னாலேயே தன் மகனுக்கு ஆபத்து வந்துவிட்டதே என்றதை நினைக்க, அவருக்கும் மூளையே குழம்பிவிட்டது.

வஸுந்தராவின் சிரிப்பும், தமாஷும் எங்கோயோ பறந்து போய்விட்டன. அவள் மனத்தில் செய்யும் வேதனைக்கோர் எல்லையே இல்லை. "பகவானே! என் ஆத்மநாதனைக் காப்பாற்று. ஒரு குறைவும் செய்யாதே!" என்று வேண்டியபடியே, இருவரையும் தன் காரில் ஏற்றிக்கொண்டு, மான் வேகமாய்க் காரைச் செலுத்த வாரம்பித்தாள்.

## 28

### தீய்ந்த பயிரில் தீயும் பிடித்தது

பத்திரிகையைப் படித்துவிட்டும், தன்னை விவாகத்திற்குத் தேர்ந்தெடுத்திருப்பதை யறிந்ததும் தன் நிலை யழிந்த சுமதி, சில வினாடிகள் மூர்ச்சையாகிக் கிடந்தாள் என்றே சொல்லவேண்டும். கூடவிருந்த சிறுமிகளில் சிலர் 'வெட்கத்தினாலும், சந்தோஷத்தினாலும் அம்மாதிரி நடிக்கிறாளோ' என்று எண்ணினார்கள்.

பின்னும் சிலருக்கு இவளுடைய மாதிரி பயமாக விருந்ததால், "நான்போய் தலைவியைக் கூப்பிடுகிறேன்" என்று ஒருத்தி கூறினாள்.

இம் மொழி அரை குறையாய் காதில் விழுந்த சுமதி, "வேண்டாம் ; வேண்டாம்!" என்று சைகை செய்து அவளை நிறுத்தினாள்.

அப் பெண்ணும் பதட்டத்துடன், "ஏன் சுமதீ தடுக்கிறாய்? உனக்கென்ன உடம்பு சொல்லேன். தலைவியை ஏன் கூப்பிட வேண்டாம் என்கிறாய்?" என்றாள்.

சுமதி:—எனக்கொரு கேடும் இல்லை. ஏதோ என் பிறப்பையும் இருப்பையும் நினைத்துக் கொண்டேன். என்னை ஏதோ செய்து விட்டது. உலகத்தில் நம்மை யுண்டாக்க ஏதுவா யிருந்த தாயை அறியாத ஜன்மமும் ஓர் ஜன்மமா! பகவான் சிருஷ்டித்த நாலு ஜாதிகளுக்குப் பிறகு, கணக்கில்லாதவாறு பல ஜாதிகள் நம் நாட்டில், எப்படி எப்படியோ உண்டாகிவிட்டன. நம்மைப் போன்ற பிறவி தெரியாத பாப ஜந்துக்களுக்கென்று ஒரு ஜாதி நிர்ணயமாகவேண்டும்போல் இருக்கிறது. "தாசிப்பிள்ளைக்குத் தகப்பன் யார்?" என்றது பழமொழி. நம் பாழாப்போன பிறவிக்குத் தாயே இன்னாரென்று தெரியாத நிலைமையில் நாம் வேறு தாயாக வேணுமா என்று எனக்கு வருத்தமாயிருக்கிறது.

அப்பெண் :—ஐயோ! என்னவோ பெரிய விஷயத்தைச் சொல்லப்போகிறாய் என்று பார்த்தேன். திருப்பித் திருப்பிப் பாடும் இதே பல்லவிதானா! சுமதீ! இதோ பாரு. வீணாக இம்மாதிரி விஷயத்தில் சஞ்சலப்படாதே! எந்தக் காலத்திலும், எந்தத் தேசத்திலும், நம்மைப்போன்ற அனாதைகள் இருந்ததாக நாம் படிக்கும் சரித்திரங்களிலிருந்து தெரியவில்லையா? தர்மம் தலைசிறந்து விளங்கிய முற்காலத்திலேயே நம்போன்ற அனாதைகள் மலிந்து கிடந்து அவர்களுக்கோர் பெயரும் சூட்டி, "சங்க்ரம ஜாதி" என்று வழங்கி வந்ததாகத் தெரிகிறது.

இப்போதோ தர்மம் இருந்த இடத்தில் அதன் ஜோதியும் இல்லை. அக்கிரமம், அநீதி, சூது, வாது, கொலை, களவு, பித்தலாட்டம் இவைகளுக்கே ப்ரதானம் அதிகரித்துவிட்டது. அதனால்தான் ஜனங்களின் புத்தியும் கெட்டுப் போராசைக்கும், பெரு நோய்க்கும், மகத்தான கஷ்டங்களுக்கும் இலக்காகி வதை படுகிறார்கள்.

அதன் பலனாகத்தான் எண்ணிலாத பால்ய விதவைகள் ஏற்பட்டுவிட்டார்கள். சராசரி நூறு வயதுக்குக் குறையாமல் நம் முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் விதவைகளை, அதிலும் பால்ய விதவைகளை அவர்கள் கண்டிருக்கவே மாட்டார்கள். இக் காலத்திலோ சராசரி வயது 23 கூட இல்லை. இந்நிலைமையில் பால்யவிதவைகள், பணப் பேராசையினால் பெண்ணைத் தள்ளிவைக்கும் கோரங்கள், அடங்காப் பிடாரிகளாய் நவ நாகரிகத்தில் மூழ்கி நாசமான பெண்கள், இம்மாதிரி பாபப் பிண்டங்களெல்லாம் உலகத்தில் அதிகரித்து விட்டதால், அதன் பலன் நம் தலையில் விடிந்தது.

சுமதி! எத்தனையோ படிக்கிறாய். இது தெரியவில்லையா? வீண் கவலைப்படாதே! அந்த வாலிபனை வந்துதான் பாரேன். மன்மதன் என்றால் அவனுக்கே தகும். அத்தகைய கட்டழகன் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கையில், உனக்கென்ன குறைவு? எழுந்திரு—என்று பெரிய உபந்நியாஸம்போல் உபதேசஞ் செய்தாள்.

எது செய்தால்தான் என்ன? சுமதியின் காதில் ஒன்றுமே விழவில்லை. அவளுடைய ஆத்மா, ஆத்மநாதனைத் தாவித் தவிக்கின்றது. "திடீரென்று என் மயக்கம் வந்ததோ தெரியவில்லையே? என்ன காரணத்தினால் அப்படி வந்திருக்கும்? அவருக்கு விரோதிகள் பலர் இருக்கிறார்களே, அவர்கள் ஏதேனும் செய்துவிட்டார்களா அல்லது 'ஹார்ட் பெயிலூர்' என்கிறார்களே, அம்மாதிரி ஏதேனும் வந்திருக்குமா? ஒன்றுமே புரியவில்லையே.

ஐயோ! மகாபாவி நான் அவரை எப்படிப்போய் விசாரிக்க முடியும்? இதைத் தலைவியிடம்தான் நான் எப்படிச் சொல்வது? அவள், ஏதாவது வித்யாஸமாய் நினைத்துவிட்டால், என்ன செய்வது? கடவுளே! எப்படியாவது ஆத்மநாதனுக்கு ஓர் ஆபத்துமின்றிக் காப்பாற்றினால் போதும்" என்று தனக்குள் வேண்டிக்கொண்டே கேட்டவளுக்குப் பதில் பேசாது படுத்திருந்தாள்.

இதற்குள் அந்தப் பெண்கள், தாங்கள் புஷ்பம் பறித்துக் கட்டவேண்டிய வேலையை விட்டு, இங்கு நிற்பதைக் கண்டால், தலைவி கோபித்துக்கொள்வாள் என்று எண்ணி, தோட்டத்தில் புகுந்துவிட்டார்கள்.

வந்த வாலிபர்கள் தேர்ந்தெடுத்த பெண்களில் சுமதி ஒருத்தி நீங்கலாக மற்றவர்களை யெல்லாம் தலைவி ஒப்புக்கொண்டாள். "அப்பா! இதற்குமேல் எதுவும் கேட்காதே. சுமதியைத் தவிர, மற்ற எந்தப் பெண்ணையாவது பொறுக்கிக்கொள்" என்றாள்.

இந்த வார்த்தையும் சுமதியின் காதில் விழுந்தது. அவளுடைய தத்தளிக்கும் மனத்தில் இந்த வார்த்தை ஒரு விஞடி பெரிய இன்பத்தையும், மறு விஞடியே தாங்க முடியாத அதிர்ச்சியையும் உண்டாக்கியது. தனக்கு இப்போது விவாகமில்லை என்றதனால், சந்தோஷமும், என் தன்னைமட்டும் நீங்கலாக என்று சொல்கிறாள்; இதன் மர்மம் என்னவாக விருக்கும். ஒருகால் தன் ரகஸ்யம் தெரிந்துவிட்டதா அல்லது வேறு இன்னும் பயங்கரம் ஏதேனும் உண்டா என்ற பெரிய சந்தேகமும் உண்டாகிவிட்டதால், அதை முற்றிலும் கவனிக்க வேண்டுமென்ற ஆவல் உண்டாகியதும் கதவருகில் வந்து, துவண்டுபோய் நின்றாள்.

வாலிபன் :—ஏன் சுமதியைத் தவிர என்கிறீர்கள்? நான் வெகு நாட்களாய் அவளையே மணக்கப் பிரியப்பட்டிருந்தேனே! அவளுக்கென்ன தோஷம்?

தலைவி :—அப்பா! நான்தான் முதலிலேயே இதைப்பற்றிக் கேட்காதே என்று கூறிவிட்டேனே மீண்டும் கேட்கிறாயே! அவளைத் தவிர என்று நான் சொல்லியதிலிருந்தே அவள் விவாகத்திற்கு லாயக்கில்லாத அபாக்யவதி என்று நீ தெரிந்துகொள்ள வேண்டாமா! மேலும் விவரங்கள் கேட்காதே!

இந்த வார்த்தை சுமதியின் தலையில் பெரிய இடி இடித்தது போன்ற அதிர்ச்சியை உண்டாக்கியது. "என்ன! நான் விவாகத்திற்கு லாயக்கற்ற அபாக்யவதியா! அபாக்யவதியா! ஐயோ! நான் பிறந்த பிறப்பே அபாக்யமானதுதானே. அதைவிட அபாக்யம் என்னை எது நசுக்குகிறதோ தெரியவில்லையே? ஹா! கடவுளே! கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதுபோல், கல்யாண வார்த்தை ஆரம்பிக்க எனது விபரீதமான ஜீவியத்தில் இன்னும் ஏதோ மர்மமிருக்கிறதென்று தெரிகிறதே. என்ன மர்மமாக விருக்கும்?

என் புத்தி தெரிந்த நாள்முதல் ஒன்றையுங் காணவில்லையே! இடபோது நினைவுக்கு வருகிறது. எனக்கு ஏதோ ரகஸ்ய எழுதிக்

கட்டி யிருப்பதாயும் அதை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் தலைவி கூறியிருப்பதில்தான் ஏதோ மர்மம் இருக்கவேண்டும். ஹா!....அதை நான் எப்படி அறிவது, என்ன செய்வேன். ஈசா! ஜகதீசா! உமாமகேசா! என்னை ஏன் இப்படி எல்லாம் சோதிக்கிருய்? நான் அபாக்யவதி....அபாக்யவதியா.... அபாக்யவதி"....என்று தனக்குள் எண்ணிக் குமுறியபடியே மீண்டும் கயிற்றுக் கட்டிலில் வந்து தடாரென்று விழுந்தாள்.

இதுகாறும் தன் பிறவி கேவலமானது என்பதை மட்டும் எண்ணி மனம் தவித்துக் கொண்டிருந்தாள். இன்று இவ் வார்த்தையைக் கேட்டதும் அதுவே ஓர் பாரமாகி மனத்தை அழுத்தியது. இதயத்தில் பெரும்பாறை புரண்டதுபோன்ற கனம் உண்டாகிவிட்டது. நான் அபாக்யவதியா....எப்படி நான் மட்டும் அபாக்யவதி. ஆம்....இதைக் கட்டாயம் அறிந்தே தீரவேண்டும். இந்த மர்மத்தை—பயங்கரத்தை—யறியாது நான் இன்று தண்ணீர் கூட குடிக்கப் போவதில்லை. தலைவி கூருவிடில், தற்கொலைதான் இந்த வேதனைக்குப் பரிகாரம்" என்று வெறி பிடித்தவள்போல் தனக்குள் தான் எண்ணி, முடிவு கட்டிக் கொண்டாள்.

ஏற்கனவே ஆத்மநாதனைப் பற்றிய ஒரு கவலையுடன் இதுவும் சேர்ந்ததால் அவளது மெல்லிய மேனி வாடி வதங்கிவிட்டது. தான் மாலை கட்டவேண்டியதையும் மறந்து படுக்கையில் கிடந்தாள்.

மாணவர்களுக்கெல்லாம் தலைவி திருப்தியாக பதில் அளித்து அனுப்பிவிட்டு, அன்று மாலை பிரார்த்தனையை முடித்துக்கொண்டு, வழக்கம்போல் பத்திரிகையைப் படிக்க ஆரம்பித்தாள்.

அதில் ஆத்மநாதன் செய்தியைக் கண்டு மனம் வருந்தியவாறு உடனே சென்று பார்த்து விசாரித்துவிட்டு வந்தாள். ஆனல், இது ஒன்றும் சுமதிக்குத் தெரியாது. சுமதி, தனக்கு உடம்பு சரியில்லை என்பதையும் காட்டிக் கொள்ளாமல் பிரார்த்தனையிலும், சாப்பாட்டிலும், கலந்து கொண்டதுபோல் பாவனை காட்டிவிட்டுப் போய்ப் படுத்துவிட்டாள்.

ஏற்கெனவே சில தினங்களாக நித்திராதேவி அவளைத் திரஸ்கரித்து வந்தாள். இன்று அவள் கண்களைச் சோகமும் நீரும் கட்டியணைத்துக் குலாவுகின்றனவே யன்றி, நித்திரையின் சின்னங்கூடத் தென்படவில்லை. புலம்பிப் புலம்பித் தலை வலியும் தாங்கமுடிய

வில்லை. தலைவியிடம் தவிர வேறு யாரிடமும் அந்த மர்மத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள மார்க்கமில்லை என்பதும் அவளுக்குத் தெரியும். தலைவியைக் கேட்பதற்கும் பயமாக விருக்கிறது. கேட்காதிருப்பதற்கும் மனம் இடங் கொடுக்கவில்லை. என்ன செய்வது என்று தத்தளித்தாள்.

தலைவியைக் கேட்டே விடுவது என்று துணிந்துவிட்டாள். மணியோ சரியாக 12 அடித்தது. எங்கும் நிசப்தம் குடிகொண்டிருக்கிறது. உலகமே நித்ராதேவியின் வயப்பட்டுக் கிடக்கிறது. இந்த ஒரு ஆத்மாவின் தவிப்பும், துடிப்பும், அவளைப் படைத்த ஈசனையன்றி வேறு யார் அறிவார்கள்?

மெல்ல சந்தடி செய்யாமல் நடந்து தலைவியின் அறைக்கு வந்தாள். தலைவி நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தாள். சுமதியின் மனக் கொதிப்பில் அவள் விம்மி பெருமூச்சு விட்டுப் புலம்பும் சப்தத்தைக் கேட்டதும் மிகவும் மிருதுவான தூக்கத்தையுடைய தலைவி திடுக்கிட்டு எழுந்து, "யாரது?" என்று கூறியபடியே விளக்கை ஏற்றினுள்.

சுமதி, தாங்கமுடியாத துயரத்துடன் தலைவியின் காலில் விழுந்து காலைக் கட்டிக்கொண்டு, "தாயே! நான் விவாகத்திற்கு லாயக்கற்ற அபாக்கியவதியா! என் பிறப்பிலுள்ள அபாக்கியத்தைத் தவிர என் வாழ்க்கைச் சுழலில் இன்னும் என்ன அபாக்கியம் என்னைத் தாக்குகிறது? அந்த மர்மத்தை இனியும் ஒளித்தல் தர்மமில்லை. இனி, என்னுல் சகிக்கமுடியாது. தாயே! தயவு செய்து சொல்லுங்கள்! சொல்லுங்கள்" என்று கண்ணீர் வடியக் கதறியவாறு கேட்டாள்.

இச் சம்பவம் தலைவிக்குப் பெரிய வியப்பாயும் மன அதிர்ச்சியாயும் இருந்தது. அம் மாணவனிடம் தான் சொல்லியதை இவள் எவ்விதம் கேட்டுவிட்டாள் என்ற ஆச்சரிய முண்டாகிவிட்டது. சுமதியைத் தூக்கி நிறுத்தி, "சுமதீ! என் திடீரென்று உனக்கு இம்மாதிரி எண்ணம் உண்டாகியது? என் அம்மா?" என்ருள்.

சுமதி:—தாயே! இனி மறைக்கப் பார்ப்பதில் பயனில்லை. என் ஒளிக்கவேண்டும். நான் மட்டும் என் விவாகத்திற்கு லாயக்

கில்லை? அதைச் சொல்லியே ஆகவேண்டும். என்னிடத்தில் என்ன தோஷம் இருக்கிறது? சொல்லுங்கள்; சொல்லுங்கள்.

தலைவி:—சுமதி! நான் சொல்வதைக் கேள். நீ இம்மாதிரி வீண் பிடிவாதம் செய்யக்கூடாது. உனக்கு ஓர் ரக்ஷாமந்திரம் கட்டியிருப்பதாக நான் சொல்லியது உனக்கு ஞாபகம் இல்லையா? அந்த ரக்ஷையின் காரணமாகத்தான் நீ அபாக்கியவதி என்று கூறினேன். போய்ப் படுத்துக்கொள். வேறொன்றுமில்லை.

சுமதி:—இதை நான் நம்பவே மாட்டேன். பேய், பிசாசு முதலியன பிடித்தவர்களுக் கன்றோ ரக்ஷாமந்திரம் கட்டுவார்கள். என்னை எந்தப்பேய் பிடித்திருக்கிறது? ரக்ஷைக்கும் விவாகத்திற்கும் என்ன சம்பந்தம்? பூதம் பிடித்திருப்பவர்களுக்குக் கூட ரக்ஷை கட்டி விவாகத்தைச் செய்வார்கள் என்று புத்தகங்களில் படித்திருக்கிறேனே! அம்மாதிரி இருக்க, எனக்கு மட்டும் இதென்ன பந்தம்? அப்படிப்பட்ட ரக்ஷை என்ன வந்துவிட்டது. இதோ! அதையும் உடைத்துப் பார்த்துவிடுகிறேன்" என்று ஆவேசம் வந்தவளைப்போல் கூறிக்கொண்டே தன் கழுத்திலுள்ள சங்கிலியில் கோத்திருந்த ஒரு சிமிழ் போன்ற மூடியுள்ள பொட்டைச் சடக்கென்று பிச்சினாள்.

மூடப்பட்டிருந்த மூடி கழன்றுவிட்டதும் அதனுள் சுமதி கண்ட ஆச்சரியத்தை—கூறத் திறமற்ற அதிர்ச்சியை—என்னென்பது? "ஹா! இது மாங்கல்யமல்லவா! இதுவா ரக்ஷை....தாயே! தாயே!....இதுவா ரக்ஷை....இது மங்கல்யமல்லவா! என் கழுத்திலா மங்கல்யம்? எனக்கு விவாகமாகிவிட்டதா!....நான்....அபாக்யவதி என்பதற்கு இதுவா காரணம்?" என்று சகிக்கமுடியாத வேதனையுடன் தலைவியின் தோள்களை மரியாதைக்கு மீறி பிடித்து ஆட்டியபடியே கண்ணீர் பெருகக் கதறிக்கொண்டே கேட்டாள்.

இம்மாதிரி ஒரு சம்பவம் நிகழப்போகிறது என்பதையே அறியாதிருந்த தலைவிக்கு மனம் குழம்பிவிட்டது. சுமதியின் மனோவேகத்தின் எல்லையைத் தலைவி அறிந்துகொண்டுவிட்டதால், இனி என்ன செய்வது என்ற திகிலும் நடுக்கமும் உண்டாயிற்று.



சுமதியைச் சமாதானம் செய்யவே முடியவில்லை. தலைவியின் கண்ணிலும் நீர் துளிர்த்துவிட்டது. வாய் திறக்கவிடாது துக்கம் தொண்டையை அடைக்கிறது. மெல்ல சமாளித்துக்கொண்டு, "ஆம். நீ அபாக்கியவதி என்பதற்கு இதுதான் முத்திரை ரக்ஷை. இது, உன் வாழ்வைப் பாழ்படுத்தக் கட்டிய ரக்ஷை. மாங்கல்ய மென்ற மங்களமான பெயர் உனக்கு....உனக்கு....ரக்ஷையாக மாறியது, விதியின் செயல். உன் கர்மாவின் நிழல் இந்த ரூப மாகியது" என்று கூறி முடிக்குமுன், சுமதி "ஹா!....கடவுளே! இனி விழிப்பின்றி ஒரே மயக்கமாக்கி என்னை நிம்மதியடையச் செய்துவிடு" என்று கூவிக்கொண்டே வெட்டிச் சாய்த்த மரம் போல் கீழே விழுந்தாள்.

## 29

### ப்ரேமை நதியில் பிளவுச் சுழல்

வஸுந்தரா, தன் மாமாவை முதலில் காரில் அழைத்து வரும் போது செய்த தமாஷ் உணர்ச்சிகள் எப்படியோ பறந்து போய்விட்டன. இந்த சமயம் கார் அப்படியே இறகுடன் பறந்து ஆஸ்பத்திரிக்குள் இறங்கிவிடக் கூடாதா என்ற உணர்ச்சியினால் உந்தப்பட்டு ஸ்பீடாமீட்டரையும் பார்க்காது வேகமாகப் போகிறாள். எதிரில் வேறு விபத்துக்கள் வந்துவிடப் போகிறதே என்கிற பயமும் மறந்துவிட்டது.

மீனலோசனியம்மாள் சப்த நாடியும் அடங்கிப் போய்விட்ட நிலைமையில், சவம்போல் உட்கார்ந்திருந்தாள். 'பையனுக்கு எந்த விதமான நிலைமை ஏற்பட்டிருந்தபோதிலும் அது நம்மால்தான்; அந்தப் பழிக்குப் பாத்திரம் நாம்தான்' என்று மனம் வெடித்து விடும் வேதனையில் சிதம்பரநாதன் தவிக்கிறார். அப்போதுதான் முன்பு புத்தியில்லாது மௌட்டீகத்தனமாகச் செய்த விஷயங்கள் அவரது மனத்தை வருத்தி அறுத்து வதைக்கின்றன.

இந் நிலைமையில் வழியிலுள்ள ரயில்வே கேட்டை அடைத்து விட்டார்கள். வஸுந்தரா கண்ணு மண்ணு தெரியாது வரும் வேகத்தில் கேட்டையே உடைத்துக்கொண்டு போய் விடுவாள் போலிருந்தது. வழியில் இதற்குமுன் சென்ற வண்டிகளும் கார் களும் நின்றிருப்பதால், ஜனங்கள் போட்ட கூச்சலிலும், மற்ற மோட்டார் ஹாரனிலும் சற்றுத் தெளிவு பெற்று, பிரேக் போட்டு வண்டியை நிறுத்தினாள்.

"இதென்ன சனியன் பிடித்த ரயில்! இது எப்போது தொலையப் போகிறதென்று காத்திருப்பது. பெரிய ந்யூஸன்ஸாயிருக்கிறதே! இதுபோன்ற இடங்களில் ஓவர் பிரிட்ஜ்கள் இருந்தால் எத்தனை சவுக்கியமாக விருக்கும்?" என்று முணுமுணுத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

சில நிமிடத்திற்கெல்லாம் ரயில் சென்றதும் கார் கிளம்பியது. ஆஸ்பத்திரியில் இறங்கியதும் தலைகால் தெரியாமல் மூவரும் அன்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு ஓடினார்கள். முன்பக்கத்து வார்டில் ஒரு பேஷண்டுடன் பேசிக்கொண்டிருந்த கமலா, இம் மூவரும் ஓடுவதைப் பார்த்துத் திடுக்கிட்டுப் பிரமித்து நின்றாள்.

"டாக்டர் எந்த விடத்தில் இருக்கிறார்?" என்று வஸுந்தரா கேட்டுக்கொண்டே ஓடினாள். எதிரிலுள்ள நர்ஸ் ஒருத்தி, "அம்மா! அவருடைய பிரைவேட் ரூமில்தான் இருக்கிறார்" என்றாள். மூவரும் அங்கு ஓடினார்கள். ஆத்மநாதனின் தலையில் ஐஸ் பை வைத்திருக்கிறது. அவன் கண்ணைத் திறக்காது பாடிக்கொண்டே படுத்திருக்கிறான். கந்தன் பக்கத்தில் உட்கார்ந்து அவன் காலைத் தடவிக்கொண்டிருக்கிறான். ஒரு நர்ஸ் தலைப்பக்கம் நின்றிருந்தாள். ஒரு சின்ன டாக்டர் சற்று தூரத்தில் உட்கார்ந்திருந்தார்.

இந்தக் காட்சியைக் கண்டதும் மீனலோசனியம்மாளின் வயிற்றைக் கலக்கியது. சிதம்பரத்தின் மூளையே சிதறியதுபோலாயிற்று. வஸுந்தராவின் கண்கள் மழை பொழிகிறதை அவளால் நிறுத்தவே முடியவில்லை. அவளும் ஒரு பெரிய டாக்டராகையினால் அநாகரீகமாக நோயாளியின் அருகில் போய் கூச்சலிடவோ, மேலே விழுந்து கண்ணீர் விடவோ இல்லை. அவர்களும் அம்மாதிரி செய்யாது தடுத்தபடியே கட்டிலின் அருகில் மூவரும் நின்றார்கள்.

ஆத்மநாதன் அப்போதும் 'கஸ்தூரிதிலகம் லலாட பலகே' என்ற ச்லோகத்தைக் கண்ணைமூடிக் கை குவித்தபடியே சொல்லிக்கொண்டிருப்பதைக் கண்ட வஸுந்தரா, "மாமீ! நீயும் பாடு!" என்று சைகை செய்தாள். கந்தன் விலகி நின்றான்.

மீனலோசனிக்குத் தொண்டையை அடைக்கும் துக்கத்தில் வாயைத் திறக்க முடியாது மென்னியைப் பிடிக்கிறது. வாயெடுக்க முடியாது தவித்ததைக் கண்ட வஸுந்தராவே தன்னைச் சமாளித்துக்கொண்டு, தானே பாட ஆரம்பித்தாள். கண்ணீர் மட்டும் ஆறாய்ப் பெருகுகிறது.

ஆத்மநாதன் அபாரமான முகமலர்ச்சியுடன், "ஹா! சகோதரீ வஸுந்தரா! வா; என்னருமை வஸுந்தரா! வா" என்று கண்ணைத்

திறந்து பார்த்தான். வஸந்தரா பாட்டை நிறுத்திவிட்டுக் கண்ணீருடன் நின்றாள். பதில் பேச முடியவில்லை. "என் செல்வா! ஆத்மநாதா! என்னப்பனே! என்னை மன்னித்துவிடு. நான் மகா பாவி. உன் அப்பன் நான் என்று சொல்லிக் கொள்ளத் தகாது என்பதை அறியாது உளறிவிட்டு மோசம் போனேன். என்னை மன்னித்து விடு" என்று சிதம்பரநாதன் கூறியபடியே ஆத்மநாதன் மார்மீது தலையை வைத்துக் கட்டிக்கொண்டார்.

மீனலோசனியம்மாள் எதுவும் பேசி அதிர்ச்சியை உண்டாக்காது, மகனின் முகத்தோடு முகம் பதித்துத் தடவிக்கொடுத்து, "பகவானே! என் வயிற்றில் பாலை வார்க்கவேண்டும்" என்று எதிரிலிருந்த படத்தை நோக்கி வேண்டினாள்.

ஆத்மநாதனுக்குக் கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் உதித்ததுபோன்று தன் பிதாவின் வார்த்தையும், செய்கையும், வஸந்தராவின் செய்கையும் தோன்றின. அவன் எத்தனைதான் மனோதிடங்கொண்ட சுத்த வீரனாக இருந்தபோதிலும், ஒரே சமயத்தில் இம்மாதிரி நேர்ந்த சம்பவங்களினால் மனம் அதிர்ச்சியே உண்டாயிது.

'அப்பா! அப்பா!' என்றான். இரண்டே குரல். அதற்குமேல் ஆயாஸத்தினால் கண்ணீர் பெருக மூடிவிட்டான். வஸந்தரா, தன் கையினால் கொஞ்சம் க்ளூகோஸை ஆத்மநாதனுக்குத் தானே வாயில் வார்த்து அவனைக் குடிக்கச் செய்தாள்.

சிதம் :—என்னப்பனே! என்னை மன்னித்துவிடு ; என்னைக் கோபிக்காதே. கண் இருந்தும் குருடனாகித் தவித்தேன். வஸந்தராவால் மீண்டும் கண்ணைப்பெற்றேன். ஆத்மநாதா! —என்று தடவிக் கொடுத்தார்.

ஆத்ம :—அப்பா! எல்லாம் என்விதி. என்விதி. வருந்தவேண்டாம்.... அம்மா! எனக்கொன்றும் பயமில்லை. அழாதே....அழாதேம்மா....இனி எனக்குக் குணமாகிவிடும். பயப்படாதே. கவலைப் படாதே....வஸந்தரா! அழாதே....எங்கே! மறுபடியும் பாடு. என் செல்வி! பாடு—என்றான்.

உடனே வஸுந்தரா பாட வாரம்பித்தாள். சிதம்பரநாதன், கந்தன் பயபக்தியுடன் தூர நிற்பதைக் கண்டு அவனிடம் போய் அவனைத் தட்டிக்கொடுத்து, "கந்தா! ஏதோ முட்டாள்தனமாக நடந்துவிட்டதை மறந்துவிடு. இனிமேல் நான் கண்ணைத் திறந்து கொண்டேன். இனி, நீ கவலைப்படவேண்டியதில்லை; நீ பழைய கந்தன்தான்" என்று கூறினர்.

கந்:—(கண்ணீர் பெருக) எஜமான்! என்னிக்கும் இந்த கயிதே ஒங்க காலு செருப்பே தூக்க காத்துகிணுக் கிதுங்க. ஐயாவுக்கு ரவே லகுவானதும் ஊருலேபோய் பாருங்க. சாமான்களெல்லாம் சூறெபூட்டுதுங்க—என்ருன்.

ஆத்மநாதன் கொஞ்சநேரம் நிம்மதியாகப் பாட்டைக் கேட்டான். பாட்டு முடிந்ததும் தந்தையை நோக்கி, "அப்பா! இனிமேல் என்னிடம் நம்பிக்கைதானு! நான் உங்கள் மகன் தானு? என்னுடைய பரிசுத்தத்தில் இனி சந்தேகப்பட மாட்டீர்களே! உங்களை இத்தனை கூத்துக்கு ஆளாக்கியது யார் தெரியுமா? இப்பொழுது, இந்த நிமிடம், நான் வெட்கத்தைவிட்டு உடைத்துச் சொல்கிறேன். "என்னை மணந்து கொள்ளாவிட்டால் உன்னைப் பல துன்பங்களுக்கு ஆளாக்கி உலகமே வெறுக்கும்படிச் செய்வேன்" என்று மானமிழந்த விமலா வலுவில் என்னை யணுகிக் கேட்டாள்.

அன்று அவளை விரட்டி உதைத்தனுப்பினேன். இதை வெளியிடாமல், என்மீது பழி சுமத்திவிட்டு, தானே வேலையை விட்டதாக நடிக்கிருள். அந்த துர்ப்புத்திகொண்ட கழுதைக்கு, மூதேவிக்கு ஏற்கெனவே நமது பகையாளியாகிய ஆரோக்யசாமி சகாயமாய்ச் சேர்ந்தான்.

அவளுடைய சொந்தக்காரப் பாவிதான் அவளுடைய போதனையால் உங்களை இந்த கதிக்கும் கொண்டுவந்தான். அவள் சென்ற பிறகு, கமலாவென்ற ஒருத்தி என்மீது கண் வீசித் தோற்ருள். அவளுக்கும் சீட்டுக்கொடுக்க எழுதிவிட்டேன். அவளும் இன்னொருத்தியும், நான் குடித்துவிட்டு அவளை இம்சித்ததாக ஓர் புளுகு மூட்டையைப் பரப்பியதாகக் கேள்விப்பட்டேன். இதை எல்லாம்

நீங்கள் நம்பிக்கொண்டு இம்மாதிரி அவர்கள் எதிரிலேயே செய்த அவமானத்தினால்தான் இம்மாதிரி என் கதியாகிவிட்டது. அவர்கள் உள்ளே பேசியதையும், நீங்கள் ஒட்டு கேட்டதையும் இதோ இந்த நர்ஸ் கவனித்திருந்து என்னிடம் சற்று முன்புதான் கூறினாள்.

எது எப்படி நடந்தாலும் என்னுடைய பரிசுத்தத்தைக் கடவுள் அறிந்தால் போதும் என்று நம்பியிருக்கிறேன்; இதெல்லாம் அறிந்த பிறகுதான் என் மனம் நிம்மதியடைந்தது" என்று மூச்சுத் திணறப் பேசினான்.

உண்மை யறிந்த சிதம்பரநாதனுக்கு மனது துக்கம் வருவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்? "குழந்தாய்! முட்டாள் தகப்பனால் விளைந்த விபத்து இது என்றதை உலகம் அறியட்டும். இனி இம்மாதிரி நான் என் புத்தியை இழக்கமாட்டேன். நீ உடம்பை அலட்டிக் கொள்ளாதே. நிம்மதியாய் இரு" என்று தேற்றினார்.

தன் தாயார் இறந்த பிறகு சரியாக முகத்தைக்கூடப் பார்க்காத வஸுந்தரா இன்று இந்தக் களையபரங்களைத் தீர்க்க முன் வந்ததில், ஆத்மநாதனின் விபத்தைக் கேட்டு, அந்த வேகத்தில் இங்கும் வந்துவிட்டாள்.

சற்று நேரங் கழித்த பிறகே அவளுடைய பிதாவின் கோபமும், கடுமையான உத்தரவும் ஞாபகத்திற்கு வந்ததும், பயம் தலை தூக்க ஆரம்பித்தது. அவள் உடனே "டாக்டர்! உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் போய் வருகிறேன். மாமாவின் நாடகம் இதோடு முடிந்திருக்குமென்று நம்புகிறேன்....மாமா! இம்மட்டோடாவது நீங்கள் ஊருக்குப் போய் குறைக்கொள்ளையைக் கவனியுங்கள்" என்றாள்.

அதே சமயம் ஆத்மநாதன் மெல்லிய குரலில், "வஸுந்தரா! இப்பவே போகவேண்டுமா! இன்னும் கொஞ்சநேரம் இருக்கக் கூடாதா! என்மீதுள்ள கோபம் இன்னமும் தணியவில்லையா!" என்று கூறும்போது கடுமையான கோபத்வனியில் "வஸுந்தரா! வஸுந்தரா!" என்று அவள் பிதா அழைக்கும் குரல் கேட்டு,

வஸுந்தரா நடுநடுங்கிப்போய் ஒரு நிமிடங்கூடத் தாமதிக்காமல், அவ் வறையை விட்டு வெளியே வந்தாள்.

அதற்குள் அவளுடைய தகப்பனர், கண்களில் நெருப்புப் பொறி பறக்க, பல்லைக் கடித்துக்கொண்டே ஒரு முழி முழித்துப் பார்த்தார். அவள் கையைத் தடதடவென்று பிடித்து இழுத்துக் கொண்டு ஓடியதைக் கண்ட ஆத்மநாதனுக்கும் மீனலோசனிக்கும் திடுக்கிட்டது. சிதம்பரம் அழுது கண்களைத் துடைத்துக்கொண்டு அறைக் கதவின் பின்புறமாக உட்கார்ந்திருந்ததால், இதைப் பார்க்க வில்லை. தமக்குப் பேருதவி செய்யவந்த சிறுமிக்கு என்ன விபரீதம் நடக்குமோ என்ற திகில் மீனலோசனியம்மாளைப் பிடித்துக் கொண்டது. ஆத்மநாதனும் அதே யோசனையில் கண்ணை மூடிக்கொண்டு குப்புறப் படுத்தான்.

## 30

### எரியும் வீட்டில் எண்ணெய் மழை பெய்தது

"கண்விழியாத நிம்மதியைக் கோரிய எனக்கு அவ்வளவு சடுதியில் கடவுள் அருள்புரிந்து விடுவதாயின், என்னுடைய மற்றைய கர்மாவின் விபரீதங்களை யார் அனுபவிப்பார்கள்? நான்தான்.....நான்தான் அனுபவித்தாகவேண்டும். இதற்குள்ளாகவா எனக்கு முடிவு? இல்லை; இல்லை. 'பாபி சதாயிசு' என்ற வாக்கு வீணாகவே ஆகாது" என்று சுமதி கண்ணைத் திறந்து பார்க்கையில் தனக்குள் எண்ணினாள்.

அவளுடைய ஆவல் நிறைவேறாது பிழைத்துக்கொண்டோம் என்கிற ஒன்று ஞாபகத்தில் தெரிந்ததேயன்றித் தான் கீழே விழுந்து எத்தனை நாளாகியதென்று அவளுக்கு எப்படித் தெரியும்?

அன்று கீழே விழுந்தபிறகு மூன்று நாள்வரை பிரக்ஞை சற்று வருவதும், வெகுநேரம் அப்படியே கிடப்பதுமாக இருந்தாள். மூன்றாவது நாள் கண் திறந்து பார்க்கும்போது தான், கட்டிலில்

படுத்திருப்பதும் தலைமீது ஐஸ் பை ஒன்றிருப்பதும், தலைவி தலை குனிந்து விசனத்துடன் வீற்றிருப்பதும் ஏக காலத்தில் சுமதி கண்டாள்.

அவளுக்கு ஆத்திரமும் துக்கமும் ஜன்னி ஏறுவதுபோல் விறு விறு என்று ஏறிவிட்டது. "அபாக்கியவதி! அபாக்கியவதி! இந்த அபாக்கியவதிக்கு படுக்கை; நோவு கொண்டாடல், ஐஸ், டாக்டர், மருந்து, உபசாரம், தூத்தூ! இதெல்லாம் எதற்கு?" என்று கூறிக் கொண்டே எல்லாவற்றையும் 'தாம்தூம்' என்று கலைத்து எறிந்து விட்டு எழுந்தாள்.

தலைவியை விழுங்கிவிடுபவள்போல் ஒரு விழி விழித்துப் பார்த்தாள். அவளுக்குப் பின்னால் சுவற்றில் மாட்டியிருந்த காலெண்டரைப் பார்த்தபிறகே தான் படுத்து மூன்று நாளாகிவிட்டதென்பது நன்றாகத் தெரிந்தது. தலைவி இவளை அழுத்துவதற்காகச் செய்த பிரயத்தனங்கள் பலிக்கவிடாமல் மீண்டும் தலைவியின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "தாயே! இனியும் நான் சும்மா இருக்கமாட்டேன். என்னால் பொறுக்க முடியாது. என்ன காரணத்திற்காக என் மாங்கல்யத்தை மறைத்துவைத்து ரகஷ்ய என்றும், மந்திரம் என்றும் கூறினீர்கள்? அதைச் சொல்லாவிட்டால் நான் தற்கொலை புரிந்துகொள்வேன். நான் குப்பைத் தொட்டியில் அகப்பட்ட அனாதை என்று இதுவரையில் கூறி யிருக்க, அத்தகைய—அன்று பிறந்த—சிசுவின் கழுத்தில் இந்த மாலை எப்படி வந்தது. இனி நான் என் பிறவியையே நம்பமாட்டேன். இதைக் கட்டிய மனிதன் யாரு? அவன் எங்கே இருக்கிறான்? என் பிறவியின் மர்மமென்ன? அதைச் சொல்லுங்கள்.

என் நோய்க்கு மருந்து தங்கள் வாயிலிருப்பதை மறந்து என்னை ஏன் படுக்கவைத்து இம்சை புரியவேண்டும்? இனி, சகிக்க மாட்டேன். தாங்கள் அதைச் சொல்லாமல், வேறு எதைச் செய் தாலும் என் நோய் தீரவே தீராது. சொல்லுங்கள். சொல்லுங்கள்" என்று கதறவாரம்பித்தாள்.

தலைவிக்கோ ஒன்றுமே தோன்றவில்லை. அவளை எத்தனை தான் சமாதானப்படுத்தினாலும், அவள் அடங்குவதாகத் தோன்ற

வில்லை. மெல்ல அவளைப் பிடித்துக் கட்டிலில் படுக்கச் செய்து "சுமதி! இதுகாறும் நீ அறியாதிருந்த ரகஸியத்தை இன்று அறியும் விதி அமைந்துவிட்டது. எனினும் பொறுமையை இழக்காதே! சாந்தமாயிரு. எத்தனையோ முக்கியமான காரணம் இருப்பதால்தான் உனக்கு உன் மர்மத்தை வெளியிடாதிருக்கும்படியாக இருந்தது. உனது இந் நிலைமையில் வீண் ஆத்திரப்படாதே. பிறகு சொல்கிறேன்" என்று எத்தனை சொல்லியும் அவைகள் ஒன்றும் சுமதியின் காதில் விழவில்லை.

"என்ன! என்னுடைய இந்த நிலைமையிலா நிம்மதிவேண்டும். பொறுமைவேண்டும். தாயே! என்னை இனியும் சோதிக்காதீர்கள். என் பொறுமையைச் சோதிக்கவேண்டாம். என் கணவன் எங்கே? என் பெற்றோர்கள் எங்கே? என் பிறப்பின் மர்மம் என்ன? நான் ஏன் இந்த அனாதை நிலையத்திலிருக்கவேண்டும்? இனி நான் சகிக்க மாட்டேன். சொன்னால்தான் பேசாமலிருப்பேன். உங்களையன்றி நான் யாரிடம்போய் முறையிடுவேன்?" என்று மீண்டும் ஆவேசத்துடன் கேட்டாள்.

தலைவி:—சுமதி! நீ இம்மாதிரி பிடிவாதம் செய்வது அழகல்ல. அந்த மர்மத்தை அறிவதால் உனக்கு இன்னும் கஷ்டமும், விடியாத் துன்பமும் சம்பவிக்குமேயன்றி நன்மையோர் கடுகளவும் இல்லை. என் வார்த்தையை நம்பு. "இப்படியே பிறந்தோம்; இப்படியே வளர்ந்தோம்; இப்படியே கடவுளைப் பஜித்துக்கொண்டு பரோபகாரமாய் உழைத்துவிட்டுச் சாகிறோம்" என்ற உறுதியில் உன் வாழ்நாளைக் கழித்துவிடு.

சுமதி:—இனி என்னால் அரை நிமிடமும் முடியாது. ஒருவன் பிறவிக் குருடனாகவே இருக்கும் வரையில் எல்லாம் ஒரே அந்தகாரமாய்த் தோன்றும். அவனுக்குச் சிறிது வெளிச்சம் புலப்படவாரம்பித்தால் அதன் பிறகும் குருடாக விருப்பானா? அதுபோலத்தான் என் கதி. அதனால் தீமை நேர்ந்தாலும் சரி. நன்மை வந்தாலும் சரி. பேராபத்தாக முடிந்தாலும் சரி; என்னையே விழுங்க வரும் பூதமாய் அமைந்தாலும் சரி. நான் இனி அதை யறியாதிருக்க முடியாது. சோதனையால் என்னை வாதனையுறச் செய்யவேண்

டாம். என் கணவன் எங்கே? என் பெற்றோர்கள் யார்? சொல்லுங்கள்" என்று சண்டித்தனம் செய்தாள்.

தலைவி:—சுமதி! ஏதோ உன்னுடைய போதாக் காலத்திற்குத்தான் இம்மாதிரியான சம்பவம் நிகழ்ந்தது. எத்தனையோ காலமாக மறைந்துகிடந்த ஓர் ரகஸியம் இன்று வெளிவருவதால் என்னென்ன விபத்துக்களுக்கு நீ இலக்காக நேருமோ? அதைக் கடவுள் தான் அறிவார். சுமதி! இம்மாதிரி நீ கேட்கும் காலம் வரும் என்று நான் நினைக்கவில்லை. ஆனல், நான் என்ருவது சாகவேண்டிய சமயம் வரும், அப்போது உனக்கு இதை வெளியிட்டுவிட்டுச் சாகலாம் என்று நான் முன் ஜாக்கிரதையுடன்தான் இருந்தேன். இந்தா; இக் கடிதத்தில் சகல விஷயங்களும் அடங்கி இருக்கின்றன. இதை நீ பொறுமையுடன் படித்து அறிந்துகொள்—என்று கூறி ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்.

சுமதி, ஆவலே வடிவாக அக் கடிதத்தைப் பிரித்துப் படிக்க வாரம்பித்தாள். கணக்கற்ற விதமான தவிப்புகள் அவள் உள்ளத்தில் போராடுகின்றன.

"என் அன்பான சுமதி!

என் முடிவுகாலத்தில் நீயறியும் பொருட்டு இதை எழுதுகிறேன். காலக் கொடுமையின் கூற்ருல் நானும் என் சகோதரனும் சிறிய பிராயத்திலேயே பிரிந்துவிட்டோம். வயிற்றுக் கொடுமைக்காக என் தம்பி கல்கத்தாவில் ஒரு மில்லில் வேலையாயிருந்து, உன் தாயை அங்கேயே மணந்து, உன்னையும் பெற்ருன்.

விதியின் வலிமைக்கு முன் எதுதான் நிற்கும்? கால்ரா நோயால் உன் தாய் இறந்தாள். தந்தைக்கு வேலை போயிற்று. உனக்கு அப்போது மூன்று வயது. உன் மாமன் வீட்டார், உன்னை வளர்த்துத் தன் மகனுக்கே விவாகம் செய்வதாயும் ஒப்பந்தம் செய்து கொண்டு வெகு சிறிய குழந்தையாகிய உன்னை உன் மாமன் மகனுக்கு விவாகத்தைச் செய்து, உன் பிதாவையும் ஆதரித்து வந்தார்களாம்.

காச நோயால் கஷ்டப்படும் உன் பிதா எப்படியாவது நீ சுகப்பட்டால் போதுமென்கிற ஒரே எண்ணத்தினால் குழந்தைக் கல்யாணத்திற்கும் இசைந்தானும். கல்யாணமாகிய மறு வருஷமே உன்னை மணந்த பையனுக்கு கர்மவியாதி இருப்பதையும் அதை மூடி வைத்து உனக்குக் கல்யாணம் செய்து உன்னைப் படுகுழியில் தள்ளிவிட்டதையும் அறிந்த உன் தந்தையின் துயரம் கட்டுக்கடங்காது போய்விட்டதாம்.

உன் கதியை எண்ணி, எண்ணிக் கண்ணீர் வடித்துப் புலம்பினானும். பெரியவியாதிக்காரனுடன் நீ என்னமாய் உன் வாழ்நாளைக் கடத்துவாய் என்று நினைக்கையில் பயங்கரமாகி விட்டதாம். நீ உயிருடன் இருப்பதைவிட இறப்பது மேலென்று தோன்றிவிட்டதால் அவர்களிடம் சண்டை போட்டுக்கொண்டு உன்னைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்து விட்டானும்.

உன்னையும் எறிந்துவிட்டுத் தானும் சாவதென்று சமுத்திரத்திற்குச் சென்றானும். ஆனால் மனம் வரவில்லையாம். அப்போதுதான் அகஸ்மாத்தாக இந்த அனாதை நிலையத்தைப்பற்றிக் கேள்வியுற்று இங்கு வந்தானும். வெகு காலத்திற்கு முன் பிரிந்த நாங்கள் அன்று சந்தித்துப் பேசுகையில், இன்னாரென்று அறிந்து கதறினோம்.

குழந்தைக்கு விவாகமாகிய விஷயத்தையே தெரியாது மறைத்து வளர்க்கும்படிக்குப் பிரமாணம் என்னிடம் வாங்கிக்கொண்டு இங்கு உன்னை விட்டுவிட்டான். நானும் அப்போதே ஒரு பொட்டு செய்து அதில் தாலியை மறைத்துவிட்டேன். அந்த மர்மத்தை அறிந்துகொள்ள சமயம் வரும்போது பாரு. உன் தந்தையும் அதிக நாள் இல்லாது இறந்தான்.

நீ இங்கு வளர்க்கப்பட்டு வருகிறாய். ரக்ஷாமந்திரம் என்று சொன்னால் அது விஷயத்தில் பயத்துடன் இருப்பாய் என்று உனக்கு மர்மத்தை மறைத்து வருகிறேன்.

உன்னுடைய கணவனைப்பற்றிப் பிறகு விசாரித்ததில், வியாதி முண்டுபோய் லெப்பர் ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதை அறிந்ததும், நான் உனக்கு இன்னும் விரக்தி பிறக்கும் மார்க்கத்திலேயே போதித்து வருகிறேன்.

சுமதீ! இனிமேல்தான் உன் பிழைப்பின் அலங்கோலம் இருக்கிறது. ஜாக்கிரதை! நெறி தவருதே. மனத்தைக் காமனுக்குப் பறி கொடுக்காதே. உனது விதியை நொந்து வாணுளைக் கடத்து. இதுதான் உன்னுடைய பிறவியின் மர்மம். இது பிறருக்குத் தெரியக்கூடாது.

இங்ஙனம்,
உன் அத்தை."

இதை மிகவும் சிரமப்பட்டுத் தட்டித் தடுமாறியபடி, படிக்கப் படிக்க சுமதியின் இதயம் இரு பிளவாய்ப் பிளந்து விடும்போல் இருக்கிறது. தலை சுற்றலும் மன அதிர்ச்சியின் வேகமும் அவளைச் சித்திரவதை செய்யப் படித்து முடித்தாள்.

"என்ன! பெரிய வியாதி! கர்ம வியாதி! ஹா! பயங்கரம்.... பயங்காம்....பெரியவியாதிக்காரனு இதைக் கட்டியவன்....ஐயோ! பாவி. சண்டாளி! நான் இதற்காகவா இன்னும் ஜீவித்திருக்கிறேன்?" என்று தலையைப் பிச்சிக்கொண்டாள். கதறினுள். முட்டிக்கொண்டாள். மண்டையை உடைத்துக் கொண்டாள்.

அவளுடைய மனே வேகம் அதிகரிக்க அதிகரிக்க அவள் அகக் கண்ணின் முன்பு ஆத்மநாதனின் தெள்ளிய பிம்பம் கண்களைக் கவரும் கட்டழகுடன் தோன்றி, அவள் உள்ளத்தைக் கலக்கிச் சிதறவடிக்கின்றது. வரும் பெருமூச்சுக்கள் இதயத்தைப் பிய்த்துக்கொண்டு வருகின்றன. 'இவள் செய்வதைப் பார்த்தால், இவளுக்குப் பயித்தியம் பிடித்துவிடுமோ!' என்ற பயம் தலைவிக்கு உண்டாகிவிட்டது.

அவளால் இந்தக் கோரமையைக் கண்டு சகிக்கமுடியவில்லை. சுமதியைப் பிடித்துப் பிடித்துப் பார்த்தும் அவள் கைக்கு அடங்குவதாகக் காணவில்லை. திடீரென்று சுமதி வெறி பிடித்தவள் போல், "நான் அபாக்கியவதி! நான் உதவாக் கட்டை. பெரிய

வியாதிக்காரனின் உரிமைப்பொருள். ஆ! ஆ!! அபாக்கியவதி!" என்று கூறிக்கொண்டே புறக்கடையை நோக்கி, ஓட ஆரம்பித்தாள்.

தலைவியின் பயம் பின்னும் பதின்மடங்காக அதிகரித்து விட்டது. "ஐயோ! புறக்கடையிலுள்ள துறவில் விழுந்துவிடப் போகிறாளே! என்ன செய்வேன்?...சுமதி! சுமதி!" என்று தலைவி பயந்து நடுங்கியபடியே அவளைப் பின்தொடர்ந்து ஓடினாள். இதைப் பார்த்த மற்ற பெண்களுக்கு விவரம் தெரியாததாகையினால், "சுமதிக்கு ஜன்னி கண்டுவிட்டது. அதனால்தான் ஓடுகிறாள்" என்று எண்ணி, அவர்களும் சுமதியைத் தடுக்க மூலைக்கொருவராக ஓட ஆரம்பித்தார்கள்.

## 31

### அன்பின் வேகத்தின் அணைகடந்த வெள்ளம்

தகப்பனாரைப் பார்த்துப் பயந்து நடுங்கிக்கொண்டே சென்ற வஸந்தாராவுக்கு என்ன துன்பம் விளையுமோ என்ற பயத்தினால் ஆத்மநாதன் மனம் தவிக்கிறது. உடனே கூடப் போவதற்கும் தேகம் இடங்கொடுக்கவில்லை. தன் தகப்பனாரின் மூடத்தனத்தினால் விளையவிருந்த விபரீதங்களையெல்லாம் வஸந்தாராதான் தந்திரமாகத் தடுத்தாள் என்றதைக் கேட்டதும் அவன் மனம் பின்னும் புழுங்கியது.

தகப்பனாரை நோக்கி, "அப்பா! எனக்கொன்றும் உடம்பில்லை. நாளைக்குச் சரியாகிவிடும் என்று நினைக்கிறேன். ஊரில் சூறைக் கொள்ளை போயிற்றாமே! நீங்கள் கந்தனுடன் ஊருக்குப் போய், அவைகளை யொருவழி செய்துவிட்டு, உடனே வந்துவிடுங்கள். மற்றபடி கவலைப்படாது தைரியமாயிருங்கள். இனிமேல் இம்மாதிரி சந்தேகத்திற்கு இடங்கொடுக்காதீர்கள். என் வார்த்

தையில் நம்பிக்கை வைத்துப் போய் வாருங்கள்" என்று தந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு கூறினன்.

சிதம்பரநாதனுக்கு உடனே ஊருக்குப்போய், தன்னை இக்கதிக்குக் கொண்டுவந்தவர்களிடம் சண்டை போடவேண்டும் என்ற ஆத்திரம் இருப்பினும், தன் மகனைப் பிரிந்துபோக மனமின்றித் தயங்கினர். ஆத்மநாதன், கந்தனுக்கும் இவருக்கும் தேறுதல் கூறி, அன்றிரவே போகும்படியாக அனுப்பிவிட்டான். இவன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, உடனே இருவரும் ஊருக்குப் போவதற்கு இசைந்தார்கள்.

தாயாருக்கும் தேறுதல் கூறி, வீட்டிற்கு அனுப்பிவிட்டான். தான்மட்டும் கண்ணை மூடிக்கொண்டு படுத்திருந்தாலும் சுமதியின் பிம்பம் இவன் அகக் கண்முன் திடும் திடும் என்று தோன்றி அலறச் செய்கின்றது. படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான். அவனல் தாங்க முடியாத தாபமும் மனோ ஏக்கமும் ஒன்று கூடி வதைக்க ஆரம்பித்தன.

தந்தையின் வார்த்தையாகிய அதிர்ச்சியினல் உண்டாகிய நோய், ஒருவாறு தீர்ந்ததெனினும், இத்தகைய அனுதையின்மீது தனது மனம் சென்று போராடுவதைத் தடுக்கமாட்டாது தத்தளிக்கிறன். ஜுரத்தையும் பார்க்காது எழுந்து அப்படியும் இப்படியும் உலாவ ஆரம்பித்தான்.

"எத்தனை நாளைக்குத்தான் என் ஆருயிர் சுமதியைப் பார்க்காதிருக்க முடியும்? ஆம். முடியவே முடியாது. என் கண்மணியைக் கண்ணார ஒருமுறை கண்டால், என் ஜுரங்கூட நீங்கிவிடுமல்லவா? பெண்ப்ரேமை என்றால், காதல் என்றால், இது பரியந்தம் அறியாதிருந்த எனக்கு அத்தகைய நோயை உண்டாக்கியது மன்னியில் என்னைப் பித்தனக்கிவிட்டுத் தானும் என் கண்ணில் படாது என்னை வதைப்பதுதான் ஸ்திரீ தர்மத்தின் முறையா? சுமதி! இது உனக்குச் சற்றும் அடுக்காது; தகாது. என்னுடைய உள்ளத்தை இப்படி உருக்காதே! என் நெஞ்சைச் சிதற அடிக்காதே! என்ன காரணத்தினல் நீ இம்மாதிரி புகுந்துகொண்டு என்னைப் பரீக்ஷிக்கின்றயோ தெரியவில்லையே! நாவல்களில் இம்

மாதிரி விஷயங்களைப் படித்தால், வெறுத்துத்தள்ளிய என்னையே இப்படி அவதியுறச் செய்து வேடிக்கைப் பார்ப்பதுதான் உனது சாமர்த்தியமா? சுமதி! உன் அழகிய முகத்தை ஒருமுறை பார்த்தால் போதும். அதற்குக் கூடவா நீ தயவு செய்யக்கூடாது. என் வேதனையை நீயும் அனுபவிப்பவளாயிருந்தால், என்னைமட்டும் இப்படி வருத்துவாயா?"

என்று பித்தன்போல் தனக்குள் எண்ணிப் பெருமூச்சு விடுவதும், ஒருபுறம் ஒதுங்கி நிற்பதும், தலையைப் பிடித்துக்கொள்வதும், ஜன்னலண்டை சென்று நிற்பதும், ஆகாயத்தை நோக்கிப் பெருமூச்சு விடுவதுமாய்த் தவிக்கிறான். அவனை மீறிக் கண்களில் துளிர்க்கும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, மீண்டும் கட்டிலில் படுத்தான்.

ரேடியோவைத் திருப்பினான். இவனை இன்னும் சோதிக்கும் பொருட்டே பகவான் செய்வதுபோன்று, "ஆசைமுகம் மறந்து போச்சே" என்ற பாட்டையே அதில் கேட்டதும் ஏற்கெனவே கலங்கியிருக்கும் உள்ளம் பின்னும் கலங்கிவிட்டது. அந்தப் பாட்டை முற்றிலும் கேட்கக்கூட அவன் பொறுமையை வகிக்கமுடியவில்லை.

ஒரு தலைவலி மாத்திரையைச் சாப்பிட்டுவிட்டுச் சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டான். இதுகாறும் பொய் சொல்வதென்றால் நாக்குக் கூசிய அதே ஆசாமி ஏதாவதொரு பொய்சாக்கை வைத்துக்கொண்டு ஆச்ரமத்திற்குச் சென்று, தன் இதயப் பிணிக்கு ஆறுதல் அளிக்கும் கண்மணியை எப்படியாவது பார்த்துவிட்டு வருவதே சரி என்று துணிச்சலுடன் தீர்மானித்தான்.

ஆத்மநாதனிடத்தில் அத்யந்த ப்ரீதியும் பயபக்தி விச்வாசமுங் கொண்ட சோமநாதன் என்கிற உதவி டாக்டர் அங்கு வந்தான். ஆத்மநாதன் சொக்காயுடன் வெளிக் கிளம்ப ஆயத்தமாய் இருப்பதைக் கண்டு வியப்புற்று, "என்ன டாக்டர்! உங்கள் உடம்பு நிலைமை என்ன? நீங்கள் கிளம்பும் ஜோரென்ன? எங்கே புறப்படுகிறீர்கள்? உடம்பை அலட்டிக் கொள்ளவேண்டாம். போய்ப் படுத்துக்கொள்ளுங்கள்!" என்றான்.

ஆத்ம :—சோமூ! எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. சற்று இப்படி உலாவி விட்டு வரலாமென்று எண்ணிக் கிளம்புகிறேன்.

சோமு :—பேஷ்! இப்போது குறைந்தது 102 டிக்கிரி ஜுரம் காய்கிறது தெரியவில்லையா! டாக்டர்! நீங்கள் படுக்கையில் படுங்கள். உடம்பை அலட்டிக் கொள்ளக்கூடாது" என்று வெகு வணக்கமாய்க் கூறியபடியே, தர்மாமீட்டரைப் பலவந்தமாக வைத்து, தான் சொன்னதற்குக் குறையாமல் அதிகமாகவே ஜுரமிருப்பதைக் காட்டி, கையைப் பிடித்து இழுத்து வந்து கட்டிலில் படுக்கவைத்தான்.

சிறிய குழந்தையைப்போல் ஆத்மநாதன் திமிறிக்கொண்டு எழுந்து, "சோமூ! நீ என்னைத் தடுக்காதே. இந்த அல்ப ஜுரத்திற்கெல்லாம் நான் படுத்துவிட்டால், அதுவே பெரிய படுக்கையாகி விடும். ஆகையால், நான் போகத்தான் போகிறேன்" என்று பிடிவாதமாகக் கிளம்பி, ஷெட்டிற்குச் சென்று காரை வெளியில் எடுத்துவிட்டான்.

சோமுவுக்கோ, 'திக் திக்' கென்று அடித்துக்கொள்கிறது. தனக்கு மேல் எஜமானராகையால் அதிகம் பேசவும் பயமாய் இருக்கிறது. அவன் ஸாகஸத்தைப் பார்த்தாலோ விபரீத பயங்கரத்தை உண்டாக்குகிறது. "இந்த ஜுர வேகத்தில் காரை எப்படி ஓட்டமுடியும்? ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால் என்ன செய்வது? இப்படி சிறு குழந்தையைப்போல் பிடிவாதம் செய்கிறாரே!" என்று நடுங்கியபடியே காரின் அருகில் சென்று, "டாக்டர்! நீங்கள் சிரமப்படவேண்டாம். நானாவது வண்டியை ஓட்டுகிறேன். அதற்கு அனுமதி கொடுங்கள்" என்று பணிவான குரலில் கேட்டான்.

ஆத்ம :—சோமூ! பயப்படாதே. ஜுரவேகத்தில் எங்கேனும் விபத்துக்குள்ளாகி விடுவேனோ என்று நினைக்கிறாயா! அப்படியொன்றும் நேராது. என் நோய்க்கு மருந்துக்காகவே — பரிகாரத்திற்காகவே — நான் போய் வருகிறேன். தைரியமாய் உன் வேலையைக் கவனிக்கப் போ—என்று கூறிக்கொண்டே காதல்

வெறி பிடித்து, காரை யோட்டிக்கொண்டு கிற்றென்று வெளியே போய்விட்டான்.

சோமுவுக்கோ கலக்கமும் திகிலும் இன்னும் அதிகமாகி விட்டதே யன்றி, மனதிற்குச் சமாதானமே ஏற்படாமல் தவிக்கிருன். "கடவுளே! எங்கள் தலைவனைக் காப்பாற்று. ஒரு விபத்துமின்றிக் காப்பாற்று" என்று வேண்டிக்கொண்டு ஒன்றுமே தோன்ருது இடிந்துபோய்விட்டான்.

## 32

### விதியின் கூற்றை வெல்லுதற்கு ஆமோ

தன் பிதாவின் கோபத்தைக் கண்டு பயந்து, நடுங்கியவாறு சென்ற வஸுந்தரா, உண்மையில் தன் பிதாவுக்கு வந்துள்ள கோபத்தினுல் ஏதோ அனர்த்தந்தான் விளையப் போகிற தென்று கதிகலங்கி விட்டாள்.

அவள் அத்தனை படித்தும், ஓர் டாக்டராகவிருந்தும், அவள் தகப்பனருக்கு அடங்கி ஒடுங்கி மிக்க பயபக்தி விச்வாஸத்துடன் இருப்பதில் ஓர் இம்மியளவும் பிரண்டவளல்லவாதலால், பிதாவின் பின்னுலேயே பொம்மையைப்போல் நடந்து சென்ருள்.

அவளுடைய பிதாவும் வழியில் ஏதும் வாய் திறக்கவில்லை. வீட்டிற்கு வந்தபிறகு "என்ன வஸுந்தரா! உன் சுயமரியாதையையும், உன் தாயின் மரண வாக்கையும் நீ இதற்குள்ளாகவா உதறித் தள்ளிவிட்டாய்? இதுதான் உன் படிப்பின் மகிமையா! நீ இம்மாதிரி போகும் நோக்கத்தை வைத்துக்கொண்டுதானு, நான் கொடுத்த கடிதத்தை அலக்ஷியமாய் மேஜையின்மீது போட்டு விட்டுப் போனுய்? இம்மாதிரி செய்வது, சற்றும் நன்ருக இல்லை. ஆத்மநாதன் மீதுள்ள மோகத்தை நீ இன்னும் விட்டபாடில்லையா? திருட்டுத்தனமாக அவனைப் போய்ப் பார்ப்பதற்காகத்தான் அவசரமான காரியம் இருப்பதாகச் சென்ருயா?

வஸுந்தரா! என்னைவிட உன்மீது அக்கரையும் கனிகரமும் கொண்டவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள். உன் விஷயத்தில் நான் எத்தனையோ எதிர்பார்த்து அந்த மனிதனுக்காக உன்னையும் ஓர் புருஷக் குழந்தையை வளர்ப்பதுபோல் வளர்த்து இத்தனை தூரம் கொண்டுவந்தும் எல்லாம் ஏமாற்றமாக முடிந்துவிட்டது.

வஸுந்தரா! இதுகாறும் உன் மனம் நோகுமே என்று உன்னிடம் சொல்லாமல் இருந்தேன். அதாவது, உன் தாயார் இருக்கிற வரையில் உன்னை யாரும் கடுகத்தனை தூஷணையும் செய்யவில்லை. உன் தாயின் மறைவுக்குப் பிறகு உன்னுடன் பிறந்த சகோதரிகளின் புருஷர்களும், அவர்களைச் சேர்ந்தோர்களும், உன் சகோதரர்களும் கூட உன்னைப் பற்றி வித்தியாசமான அபிப்பிராயப் பட்டுப் பேசுவதை என்னால் சகிக்க முடியவில்லை.

என் தலை இருக்கையிலேயே இக் கதியாயின், என் மறைவுக்குப் பிறகு அவர்களே வேண்டுமென்று உன்னைத் தூற்றித் தெருவில் இழுப்பார்கள். இக் காலம் முன்னைவிட எத்தனையோ வகையில் முன்னேற்ற மடைந்திருப்பினும் பழய மூட எண்ணங்களும் வார்த்தைகளும் ஓய்ந்த பாடில்லை. அதொருபுறம் மலைபோல் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆகையால், நீ வீண் அபவாத மூட்டையைச் சுமக்காதே.

உன்னைக் கோரும் மனிதரும் பெரிய மனிதர். சகல அம்சத்திலும் ஆத்மநாதனுக்கு இணையானவர். நீ தனியாக கன்ஸல்டிங்ரூம் அல்லது ஆஸ்பத்திரியே சின்னதாக ஸ்திரீகளுக்கு மட்டும் ஒன்று வைப்பதாயினும் தானே அதை வைத்துக்கொடுத்து ஆதரிப்பதாக எழுதியிருக்கிறார்.

அவருடைய தாயாருக்கு உடம்பு அதிகமாகி விட்டதாம். அவள் உயிருடன் இருக்கையில் விவாகத்தைச் செய்து பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறாளாம். ஆகையால், அடுத்த வாரமே விவாகத்தைக் கல்கத்தாவிலேயே முடித்துவிட வேண்டுமாம். இன்று இரவே புறப்படும்படிக் கட்டாயமாய் எழுதியிருக்கிறார்.

அவருடைய தாயாரின் கோரிக்கையை நாமும் கவனிக்க வேண்டியவர்கள் அல்லவா! நீ வீண் காலஹரணம் செய்யாதே.

உடனே புறப்படத் தயாராகக் கிளம்பு. இதற்குமேல் பேச்சே வேண்டாம். இதற்கும் தார்க்காணிப்பதாயின், நான் டில்லிக்குப் போய் என் மகனிடம் சேர்ந்துவிடுவேன். பிறகு உன்பாடு, உன் விதியின் பாடு" என்று சற்று ஆத்திரமும், அழுத்தமும், கண்டிப்பும் கலந்த தொனியில் கூறினர்.

அதற்குமேல் அந்த அபலேதான் என்ன செய்வாள் ? வீணை அபவாத மூட்டையைச் சுமக்கவும், அவள் மனம் விரும்பவில்லை. தான் இத் தொழிலைக் கற்றுத் தன் ஆத்மநாதனுடன் உழைத்துக் களிக்க எண்ணிய எண்ணம் இடிந்துபோய் விட்டதால், அதன் பிறகு தொழில்மீதே அவளுக்கு ஆதியிலிருந்த உத்ஸாகம் குறைந்து விட்டது. ஏதோ மெஷின்போல் வேலை செய்து வந்தாள்.

தகப்பனரின் வார்த்தைகளைக் கேட்டதும் அவள் மனம் தத்த ளித்தது. தாயாரின் மரணவாக்கும் தந்தையின் கோபமும் அவள் இதயத்தில் மல் யுத்தம் செய்தன. ஆத்மநாதனை நினைக்கும்போது அந்த நிலைமையில் அவளால் சகிக்கக் கூடாத வேதனை வந்து சுற்றிக்கொண்டு, அவள் நெஞ்சை அள்ளித் தின்கின்றது.

இந்த தர்ம சங்கடமான நிலைமையில், அவள் என்னதான் செய்வாள், தந்தைக்கு எவ்விதந்தான் பதில் சொல்வாள்? அவள் இதயத்தில் செய்யும் வேதனையோ சகிக்க முடியவில்லை. அவள், தன் எதிரிலுள்ள தன் தாயின் படத்தை நோக்கினுள். அவளுக்குப் பூர்வ கதைகளெல்லாம் ஞாபகத்திற்கு வந்துவிட்டன.

அவ்வளவுதான், அவள் சில வினடிகள் மரம்போல் நின்ருள். வாயைத் திறந்து என்ன பதில் வரப்போகிறதென்று தன் பிதா எதிர்பார்க்கிருர் என்பதை அவள் அறிவாளாகையால் அவரையும் திருப்தி செய்து, தாயின் வாக்கையும் பரிபாலித்து, தனக்கு ஒரு கெட்ட பெயரும் இல்லாது காப்பாற்றிக் கொள்ள உறுதியாகத் தீர்மானித்து விட்டாள்.

உடனே மறுபேச்சின்றி அவளே தன் கையால், "இன்றிரவு கல்கத்தா மெயிலுக்குப் புறப்படுகிறேம்" என்று ஒரு தந்தியை எழுதித் தகப்பனரிடம் கொடுத்தாள். அவர் எதிர்பார்த்தது கை கூடிவிட்டதும் பரம சந்தோஷத்துடன், மகளைத் தட்டிக்கொடுத்து முதுகைத் தடவினர்.

அவள் உள்ளத்தில் கொதிக்கும் கொதிப்பை இவரால் அறிய முடியுமா? அவளுடைய கண்களில் துளிர்க்கும் நீரைத்தான் நிறுத்த அவரால் ஆகுமா? தந்தியை எடுத்துக்கொண்டு அவர் போய் விட்டார்.

இரவு கல்கத்தா மெயிலில் ஏறும் பிரயாணிகளின் கூட்டமும் இரைச்சலும் கேட்கவேண்டுமா! இரண்டாவது வகுப்பு வண்டியில் இரண்டு ஸீட்டுக்கள் மட்டும் ரிஸர்வ் செய்து வைத்திருந்தது. வண்டி புறப்படுவதற்கு 10 நிமிடத்திற்கு முன்புதான் வஸந்தாவும் அவள் பிதாவும் வந்து, தமக்கென ரிஸர்வ் செய்திருந்த வண்டியில் ஏறினார்கள்.

வஸந்தராவுக்கு இதுவரையில் இருந்த மனவேதனையைவிட ரயிலில் ஏறியதும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த விசனமும், ஏக்கமும், தாங்கமுடியாது பொங்குகின்றது. 'ஆத்மநாதனின் உடம்பு எப்படி இருக்கிறதோ!' என்கிற கவலை யொருபுறம் வதைக்க, ஜன்னலின் ஓரமாக உட்கார்ந்து தலையில் ஒரு கையும் ஜன்னல்மீது ஒரு கையும் வைத்துக்கொண்டு, அவள் பதுமை போல வீற்றிருந்தாள்.

கல்கத்தா மெயிலும் மணி அடித்ததும், கூவிக்கொண்டே கிளம்பிவிட்டது. அதே மெயிலில் பிரயாணம் செய்யும் ஆயிரக் கணக்கான ஜனங்களில் சிலருக்கு ஆனந்தமாயும், சிலருக்கு விசனமாயும், சிலருக்கு விளையாட்டாயும், சிலருக்கு ஏக்கமாயும், சிலருக்குத் தாங்கமுடியாத துக்கமாயும் பலவிதமான உணர்ச்சி களுடன் உந்தப்பட்டவர்களாய்ச் செல்கிறார்கள்.

இவர்களில் நம் வஸந்தாவின் நிலைமையையும், அவள் பிதாவின் நிலைமையையும் நீங்களே ஊகித்துக்கொள்ளலாம். அவள் அசையாப் பதுமைபோன்றிருப்பினும், காற்றில் கூந்தல் பறப்பதும், கண்ணீர்த் துளி கீழே உதிர்வதும் கவித்திறம் பெற்றோர் நோக்கினால் மேகத்தின் கூட்டம் அசைந்து ஓடுவது போன்றும், அதன் இடையில் பனித்துளி அல்லது மழைத் துளி சிந்துவது போன்றும் வர்ணிப்பார்கள். மெயிலும் வெகு வேகமாகச் சென்றுவிட்டது.

18031

## நமது அன்பர்களுக்கு !

நமது ஏஜண்டு ஸ்ரீமான். கே. டி. ராமஸ்வாமி அய்யர், தமிழ் நாட்டின் பல பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார். அவரிடம் சந்தாவைச் செலுத்தி, ரசீது பெற்றுக்கொண்டு ஜகன்மோகினியை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

---

## நமது விளம்பர விகிதம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கத்துக்கு ஒரு முறை | ரூ. | 12 0 0 | கால் பக்கத்துக்கு ,, | ரூ. | 4 0 0 |
| அரை பக்கத்துக்கு ,, | ,, | 6 8 0 | உள்ளட்டைக்கு ,, | ,, | 15 0 0 |

நீண்ட கால விளம்பரங்களுக்குத் தனிச் சலுகை காட்டப்படும்.

## ஒரு வருஷ சஞ்சிகையும் இதர நாவல்களும் இனாமாக வேண்டுமா ?

1. மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு, ஒரு வருஷ சஞ்சிகை இனாம்.

2. எத்தனை புதிய சந்தாநேயர்களைச் சேர்த்து முன் பணம் நமக்கு அனுப்புகிறீர்களோ அத்தனை எட்டணா விலையுள்ள நாவல் இனாம்.

உதாரணமாக 4 சந்தா நேயர்களைச் சேர்த்தால், ரூ. 2 விலையுள்ள தியாகக்கோடி இனாம்.

## இதுவரை யாரும் அளிக்காத நூதன வெகுமதி

அன்பர்களின் உதவிக்கு நன்றிசெலுத்தல் கடமையல்லவா ?

16-வதாண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, புதுவருஷ சந்தாவைசெலுத்துவதுடன், புதிதாக ஒருவரைச் சந்தாதாரராகச் சேர்த்து அனுப்பும் சந்தாநேயர்களுக்குப் புதுவிதமான வெகுமதியளிக்க முன்வந்துள்ளோம். அதாவது :—அங்ஙனம் உதவும் அன்பரின் முழு விலாசத்துடன் 100 தாள்கள் கொண்ட "லெட்டர் பேபர் பாட்" ஒன்றை முற்றிலும் இனாமாக அளிப்பதாகத் தீர்மானித்துள்ளோம்.

"JAGANMOHINI" Vol. XVI No. 4 Regd. No. M. 221




த
லை
வ
லி
க்
கு




ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையு
விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,
சென்னை கல்கத்தா பம்பா


Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St. Triplicane, Madras.